வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 06 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 271 பக்கங்கள் : 16




## நிறைவேற்றதிகார ஜனாதிபதி நாட்டுக்கு மிகவும் அவசியம்!

### சட்டக் கல்லூரி அதிபர் வலியுறுத்தல்



கொழும்பு, செப். 28
நாட்டின் பல்வேறு இனக்குழுக் களிடையே ஒற்றுமையை நிலை நாட்டுவதற்கும், வெளிநாட்டுத் தலையீடுகளைத் தவிர்ப்பதற்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி மிகவும் முக்கியமானது என சட்டக் கல்லூரி அதிபர் பிரசாந்த லால் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.
நிகழ்வொன்றில் கலந்துகொண்டு, அரசாங்கம்

15

### இலங்கை மனித புதைகுழி விவகாரம்

## சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து தடயவியல் விசாரணைகள் நடக்கும்!

கொழும்பு, செப். 28
இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள மனித புதைகுழி விவகாரத்தில் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 29ஆவது அமர்வு கடந்த 22ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில், இலங்கை தொடர்பான விவகாரம் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.
இதன்போது, இலங்கை சார்பில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான தூதுக்குழு கலந்துகொண்டது.
காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில்

15

## காற்றாலைக்கு எதிரான போராட்டம் பொதுமக்கள் மீது பொலிஸ் தாக்குதல்

### மன்னாரில் பெரும் பதற்ற நிலை



மன்னார், செப்ரெம்பர் 28
**மன்னாரில் காற்றாலை மின் திட்டத்துக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வரும் நிலையில், மக்களின் விருப்பத்துக்கு மாறாக கடும் எதிர்ப்புக்கு மத்தியில் காற்றாலைக்கான உபகரணங்கள் மன்னார் நகருக்குள் கொண்டுவரப்பட்டன. இதன்போது எதிர்ப்பில் ஈடுபட்ட மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

பொலிஸாரின் பாதுகாப்புடன் மன்னார் நகருக்குள் பல பாரிய வாகனங்களில் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் அமைப்பதற்கான உபகரணங்கள் நேற்று முன்தினம் இரவு இரவு 10 மணி முதல் கொண்டுவரப்பட்டன.
இந்த நிலையில் தொடர்ச்சியாக 55 நாட்களுக்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் போராட்டக் குழு, மாவட்ட மக்கள், அருட்தந்தையர்கள் உள்ளடங்கலாக பல நூற்றுக் கணக்கானவர்கள் ஒன்று கூடி எதிர்ப்பை தெரிவித்தனர்.
இதனையடுத்து பொலிஸார் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸார் என பல நூற்றுக்கணக்கானவர்களின் பாதுகாப்புடன் பல வாகனங்களில் காற்றாலை மின் கோபுரம் அமைப்பதற்கான பொருட்கள் மன்னார்

15

## கணனி அறிவியலில் இலங்கை பின்னடைவு

கொழும்பு, செப். 28
இலங்கையில் கணனி அறிவு விகிதம் அதிர்ச்சியூட்டும் அளவில் மிகவும் குறைவாக உள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அண்மைய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
2024 ஆம் ஆண்டு நிலவரப்படி, இலங்கையர்களில் ஐந்து பேரில் இரண்டு பேர் மட்டுமே கணனி பயன்படுத்தத் தெரிந்தவர்களாக உள்ளனர்.

15

## கடற்றொழிலாளர் பிள்ளைகளின் கல்விக்காக விசேட நிதி உதவி!

### அமைச்சர் சந்திரசேகர் அறிவிப்பு

கொழும்பு, செப். 28
கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து விசேட நிதி உதவி வழங்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத்

15

## மன்னார் மக்களின் உணர்வுபூர்வமான போராட்டத்தை உடைத்துள்ளார் அநுர!

### சாடுகின்றார் செல்வம் அடைக்கலநாதன்



கொழும்பு, செப். 28
காற்றாலை திட்டத்தின் ஊடாக நாங்கள் அழிக்கப்படப் போகிறோம் என்ற மக்களின் உணர்வுபூர்வமான போராட்டத்தை ஜனாதிபதி உடைத்துள்ளதாக ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.
ஜனாதிபதியின் கொள்கை என்பது, அபிவிருத்திதான் முதலில் பின்னர்தான் மக்கள் என்ற வகையில் உள்ளதாக செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டார். ஜனநாயக ரீதியான செயற்பாடுகள் என்பது

15

## 2017-2023 வரை காணாமல் ஆக்கப்பட்ட எந்தவொரு வழக்கும் பதிவாகவில்லை!

### ஐ.நா.வில் நீதி அமைச்சர் ஹர்ஷன



கொழும்பு, செப்.28
**2017 முதல் 2023** வரையிலான அறிக்கையிடல் காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எந்தவொரு வழக்கும் பதிவாகவில்லை என்று இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகளின் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் முன்னால் இலங்கை தனது ஆரம்ப அறிக்கையைச் சமர்ப்பித்தபோதே இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 29ஆவது அமர்வு கடந்த 22

15

## நீதி நிலைநாட்டப்படாவிட்டால் நல்லிணக்கம் சாத்தியமில்லை!

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக ஆசிய பசுபிக் பொறுப்பதிகாரி

கொழும்பு, செப். 28
நிலைமாறுகால நீதியின் அடிப்படை நீதியே எனவும், நீதி நிலைநாட்டப்படாமல் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது சாத்தியமில்லை எனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பொறுப்பதிகாரி ரொரி மன்கோவன் இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்த் தரப்புப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.
இலங்கை - சுவிற்சர்லாந்து பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிற்சர்லாந்து

15

## தையிட்டி விகாரை பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காணமுடியாது

### அமைச்சர் ஹினிதும சுனில் செனவி

கொழும்பு, செப். 28
யாழ்ப்பாணம் - தையிட்டி விகாரை பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காண முடியாது என புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள், கலை கலாசாரங்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.
நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் தலைமீட்டின் ஊடாக தையிட்டி விகாரை பிரச்னைக்குத் தீர்வு காண எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் தையிட்டி பிரதேசத்தில் உள்ள திஸ்ஸ விகாரை பதிவு செய்யப்படவில்லை.
இந்த விகாரையின் காணி தொடர்பான விடயங்கள் ஆராயப்படுகின்றன.
இந்த பகுதியில் இடம் பெறும் போராட்டங்கள் குறித்து அமைச்சுக்கு உத்தியோக

15

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டி விகாரை பிரச்னைக்கு தீர்வுகாண எதிர்பார்த்துள்ளோம்

## புத்தசாசன அமைச்சர் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 28

யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரை பதிவு செய்யப்படவில்லை. காணியும் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படவில்லை. காணி குறித்து வெளிப்படைத் தன்மையுடன் ஆராயப்படுகிறது. தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்னைக்கு உண்மை நோக்கத்துடன் தீர்வு காண்பதற்கு எடுத்த நடவடிக்கைகளை ஆராய வேண்டும். இந்த பிரச்னைக்கு உடன் தீர்வு காணும் தன்மை கிடையாது. நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் தலையீட்டின் ஊடாக தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்னைக்குத் தீர்வு காண எதிர்பார்த்துள்ளோம் என புத்தசாசன அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு தையிட்டி பிரதேசத்தில் திஸ்ஸ விகாரை எனும் விகாரை ஒன்று உள்ளது. இந்த விகாரை பதிவு செய்யப்படவில்லை. இந்த விகாரையின் காணி தொடர்பான விடயங்கள் ஆராயப்படுகின்றன.

இந்தப் பகுதியில் இடம்பெறும் போராட்டங்கள் குறித்து பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த போராட்டங்கள் குறித்து அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக ஏதும் அறிவிக்கப்படவில்லை. ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்களே உள்ளன.

இந்த விகாரை அமையப் பெற்றுள்ள காணியானது காணி அமைச்சால் கைப்பற்றப்பட்டு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. காணி அரசுடமையாக்கல் சட்டத்தின் பிரகாரம் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காத காரணத்தால் அதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் இதுவரையில் பிரசுரிக்கப்படவில்லை.

இந்தக் காணி தொடர்பில் அமைச்சு மட்டத்தில் எவ்வித தீர்வும் எடுக்கப்படாத நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குரிய தீர்மானங்கள் ஏதும் எடுக்கப்படவில்லை. இந்தக் காணி தமக்குரியது என்று போராடும் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு பல சுற்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். - என்றார். (எ)



# வடக்கு மாகாண தொழில்துறை வர்த்தக சந்தை வவுனியாவில்

வவுனியா, செப். 28

வடக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களம் மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை இணைந்து நடத்திய வட மாகாண தொழில்துறை வர்த்தக சந்தை வவுனியா மாநகர சபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வவுனியா மாவட்ட அரச அதிபர் பி.ஏ. சரத்சந்திர வர்த்தக சந்தையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த சந்தையில் உள்ளூர் உற்பத்திகள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ச்சியாக நேற்றும் வர்த்தக சந்தை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு. நந்தகோபாலன்,வவுனியா மேலதிக அரச அதிபர் நா. கமலதாசன், பிரதேச செயலாளர் இ. பிர தாபன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எ-10)

# வர்த்தக நிலையத்தில் திருடிய நால்வர் கைது

யாழ்ப்பாணம், செப். 28

திருநெல்வேலியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து அங்கிருந்த பொருட்களை திருடிய 19, 27, 30 மற்றும் 32 வயதுடைய சந்தேக நபர்கள் நால்வர் நேற்று முன்தினம் கோப்பாய் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வர்த்தக நிலையமானது கடந்த 25 ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டு 27 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருந்தன. இந்த நிலையில் வர்த்தக நிலைய உரிமையாளர் இது குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

அந்தவகையில் விரைந்து நடவடிக்கை எடுத்த கோப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் இந்த சந்தேகநபர்கள் நால்வரையும் கைது செய்ததுடன் திருடிய பொருட்களையும் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார். அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# யாழ்ப்பாணத்தில் இன்று விக்சித் பாரத் ஓட்டம்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். இந்திய துணைத் தூதரகம் இன்று காலை 06.30 மணிக்கு யாழ்ப்பாணத் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் தொடங்கி, விக்சித் பாரத் ஓட்டம் - 2025 நிகழ்வை நடத்துகிறது. யாழ்ப்பாணத்தின் முக்கிய சின்னங்கள் ஊடாக நடைபெறும் இந்த ஓட்டம், இந்திய வம்சாவளியினரும், உள்ளூர் சமூகத்தினரும், இந்தியாவின் நண்பர்களும் ஒன்றிணைந்து உடற் பயிற்சி, சேவை மற்றும் கூட்டுப் பொறுப்புணர்வை கொண்டாடும் நிகழ்வாக அமையும்.

உலகளாவிய அளவில் 150 இற்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் விக்சித் பாரத் ஓட்டம் நடைபெறுகிறது. இந்தியாவின் முன்னேற்றப் பயணத்தை கொண்டாடுவதோடு, சேவை, மனவொற்றுமை மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவித்து, உலகம் முழுவதும் சமூகங்களை இணைக்கும் நோக்கத்தோடு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லண்டன் மற்றும் பாரிஸிலிருந்து நியூயோர்க், மொஸ்கோ, சிட்னி மற்றும் யாழ்ப்பாணம் வரை சமூகங்கள் ஒன்றிணைந்து, தமது பாரம்பரியத்தில் பெருமை கொள்வதோடு, இந்தியாவின் விக்சித் பாரத் பயண நிகழ்வில் பங்கேற்க யாழ். இந்திய துணைத் தூதரகம் அழைப்பு விடுத்துள்ளது. (எ)

# முதிரைக் குற்றிகள் ஏற்றியபடி விபத்துக்குள்ளானது வாகனம்!

வவுனியா, செப். 28

வவுனியா புதுக்குளம் பகுதிக்கு அருகாமையில் முதிரைக் குற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்று விபத்துக்குள்ளான நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.


இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

குறித்த வாகனம் இரணை இலுப்பங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்தபோது அங்கு கடமையில் இருந்த பொலிஸாரால் வழிமறிக்கப் ஷ பட்டுள்ளது. எனினும் அது நிறுத்தாமல் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் புதுக் குளத்துக்கு அண்மித்த பகுதி யில் விபத்துக்குள்ளான நிலை யில் பொலிஸாரால் அந்த வாகனம் மீட்கப்பட்டது.

வாகனத்தில் இருந்த 11 முதிரைக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

வாகனத்தின் சாரதி மாயமாகியுள்ள நிலையில் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-10)



# இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நிதியறிவுக் கண்காட்சி

கிளிநொச்சி, செப். 28

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிவு மாதத்தை முன்னிட்டு மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நிதியறிவுக் கண்காட்சி நடைபெற்றது.

மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்திக்கான பணிப் பாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடம் நிதி கல்வியறிவை மேம்படுத்தும் இலங்கை மத்திய வங்கியின் தொடர்ச்சியான முயற்சியின் ஒரு பகுதியாக, மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

கண்காட்சியில் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் காட்சிக் கூடங்கள், கொழும்பு பங்கு பரிவர்த்தனை முதலீட்டு வழிகாட்டுதல்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய சேவைகள், கொடுகடன் தகவல் பணியக சேவைகள், தொழிற்பயிற்சி வழிகாட்டுதல்கள் என்பன நடைபெற்றன.

இந்த நிகழ்வு தனிநபர் நிதியியல் முகாமைத்துவம், வங்கிச் சேவைகள், டிஜிற்றல் வங்கிச் சேவைகள், நிதியியல் மோசடிகள் மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டுதல்கள் போன்றவை குறித்து பொதுமக்கள் பயனுள்ள தகவல்களை பெற்றுக் கொள்ளும் வகையில் தேவையான நிதிக் கல்வியறிவு மற்றும் அவற்றின் பிரயோகம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டிருந்தது.

# தெய்வீக திருக்கூட்ட நிகழ்வோடு இணைந்த வாணிவிழா ஆதீன கலா மண்டபத்தில் இன்று

யாழ்ப்பாணம், செப். 28

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் தெய்வீக திருக்கூட்ட நிகழ்வோடு இணைந்த வாணி விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமெரிக்கா, ஹவாய், சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் சிறீ சிவகுருநாதபீட எட்டாவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகர் சுவாமிகளும் திருமுன்னிலை வகிக்க சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியச் செயலாளர் சிவசிறீ சோ. கேதீஸ்வரக்குருக்களின் ஆசியோடு பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கயிலாசபிள்ளை சிவகரன் பிரதம விருந்தினராகவும் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி ஜி. டி. தேவராஜா சிறப்பு விருந்தினராகவும் யாழ். இந்துக்கல்லூரி உதவி அதிபர் சிவநாதன் பரணிதரனும் நல்லூர் சங்கிலியன் மன்றச் செயலாளர் இராமலிங்கம் சந்திரகுமாரும் யாழ். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய ஆசிரியர் திருமதி தி. குகதாஸூம் ஓய்வு நிலை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் புண்ணியமூர்த்தி ஆறுமுகநாதனும் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலய நிர்வாக சபைச் செயலாளர் சு. விஸ்வநாதனும் சைவ வித்தியா விருத்திச்சங்கச் சமயப் பணிப்பாளர் திருமதி மு. ரஜனியும் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

நெட்டிலிப்பாய் சிறீ கணேசா அறநெறிப் பாடசாலை, திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப்பாடசாலை, சிறீலசிறீ ஆறுமுகநாவலர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் மற்றும் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் கலாசார மண்டபம் ஆகியவற்றில் முன்னெடுக்கப்படும் கலை, கலாசார வகுப்புகளின் மாணவர்களும் கலை நிகழ்வுகளை நிகழ்த்தவுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி விமான நிலையத்தால் அண்மைக்காலமாக இலாபம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தகவல்

கொழும்பு, செப். 28

பலாலி (யாழ்ப்பாணம் சர்வதேச) விமான நிலையம் அண்மைக்காலமாக இலாபமடைந்துள்ளது. 2025 ஆம் ஆண்டு (ஒகஸ்ட் வரை ) 85 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் இலாபமடைந்துள்ளது. நிபுணத்துவ திட்டமிடலுக்கு அமைய பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுமே தவிர அரசியல்வாதிகளின் நோக்கங்களுக்காக அல்ல என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பலாலி விமான நிலைய அபிவிருத்திக்காக 2025 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியில் 2025. 09. 21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 150 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. காங்கேசன்துறை இறங்குதுறை அபிவிருத்திக்கு 3455 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் 2020 ஆம் ஆண்டு இந்தியாவின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படுகிறது. பலாலி விமான நிலையம் அண்மைக்காலமாக இலாபமடைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டு 82 மில்லியன் ரூபாய், 2023 ஆம் ஆண்டு 15 மில்லியன் ரூபாய், 2024 ஆம் ஆண்டு 76 மில்லியன் ரூபாய், 2025 ஆம் ஆண்டு (ஒகஸ்ட்) 85 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் இலாபமடைந்துள்ளது.

பலாலி விமான நிலையத்தை விரிவுபடுத்துவதற்கான காணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அபிவிருத்திப் பணிகள் பாதுகாப்பு அமைச்சால் மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே இவ்விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் கேள்விகளை கேட்பது பொருத்தமானதாக அமையும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விமான நிலையம் மற்றும் துறைமுக அபிவிருத்திக்காக காணிகள் கைப்பற்றப்படவில்லை - என்றார். (எ)

# பருத்தித்துறையில் உணவகத்துக்கு சீல்

யாழ்ப்பாணம், செப். 28

பருத்தித்துறை பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகத்துக்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் சீல் வைக்கப்பட்டுள்ளது

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் மூன்று உணவக உரிமையாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மன்றில் முன்னிலையான மூன்று உணவக உரிமையாளர்களும் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து 37 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்த மன்று, சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்துக்கு சீல் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

(எ-03)

# டெங்கு பரவும் சூழலை பேணிய பத்து பேருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணத்தில் டெங்கு நுளம்பு பரவும் சூழலை பேணிய குற்றச்சாட்டில் வீட்டு உரிமையாளர்களுக்கு 80 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை ஆளுகைக்கு உட்பட்ட தொண்டைமானாறு பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு களவிஜயத்தின் போது டெங்கு நுளம்பு பரவக் கூடிய சூழலை பேணிய 10 ஆதன உரிமையாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது மன்றில் முன்னிலையான 10 ஆதன உரிமையாளர்களும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, தலா 08 ஆயிரம் ரூபாய் வீதம் 10 பேருக்கும் 80 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

(எ-03)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அரசின் அடக்குமுறையை செயல்படுத்துகிறது

## நளின் பண்டார எம். பி. சாடல்

கொழும்பு, செப். 28

மக்கள் விடுதலை முன்னணியின் சட்ட பிரிவின் உறுப்பினர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டு, அரசாங்கத்தின் அடக்குமுறையை செயல்படுத்துகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கோப் குழு அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கோப் குழு கடந்த காலத்தைப் போன்று நிகழ்கால நடவடிக்கைகள் மற்றும் முறைகேடுகளையும் ஆராய வேண்டும். பிள்ளையானின் உதவியாளர் பாசிக்குடா பகுதியில் 250 ஏக்கர் அரசகாணியை முறையற்ற வகையில் பெற்றுக் கொண்டுள்ளார். இந்தக் காணியை மீளப்பெறுமாறு காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

துறைமுக அதிகார சபையின் செயல்பாடுகள் பிரச்னைக்குரியதாக உள்ளன. சுங்கத்தில் இருந்து அண்மையில் 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. எதிர்வரும் நாட்களில் சுங்கம் மற்றும் துறைமுக அதிகார சபை கோப் குழுவுக்கு அழைக்கப்படுமா? என்றும் நளின் பண்டார கேள்வி எழுப்பினார்.

(எ)

# 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, செப். 28

நாட்டின் சில பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக ஒன்பது மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.(எ)

# சர்ச்சைக்குரிய கொள்கலன்களை விடுவிக்க அனுமதியளித்தது யார்?

## நாமல் ராஜபக்ஷ எம். பி. கேள்வி

கொழும்பு, செப். 28

நாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்ற உப்பு, அரிசி மற்றும் கொள்கலன்கள் விடுவிப்பு ஆகிய மோசடிகளை மறைப்பதற்காகவே அரசாங்கம் போதைப்பொருளை ஆயுதமாக பயன்படுத்துகின்றது. தொடர்ந்து அரசாங்கம் எம் மீது குற்றம் சுமத்துவதை விடுத்து போதைப்பொருள் அடங்கிய 2 கொள்கலன்களையும், சோதனையிடப்படாத ஏனைய 323 கொள்கலன்களையும் விடுவிக்க அனுமதியளித்தது யார்? என்பதை விரைவில் வெளிப்படுத்த வேண்டும் என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதிமன்ற வழக்கு விசாரணைக்காக வெள்ளிக்கிழமை கொழும்பு நீதிமன்றத்துக்கு சமுகமளித்திருந்த நாமல் ராஜபக்ஷவிடம் தென் மாகாணங்களின் பல பகுதிகளிலிருந்து மீட்கப்பட்ட போதைப் பொருள் தொடர்பில் ஊடக வியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# நிகழ்நிலை காப்பு சட்டம் கணிசமானளவு திருத்தம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, செப். 28

சமூக வலைத்தளங்களில் வெறுப்புப் பேச்சுக்கள், இன முறுகலை தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுதல் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன. நிகழ்நிலை காப்புச் சட்டம் கணிசமான அளவில் திருத்தம் செய்யப்பட்டு, சமூக வலைத்தளங்கள் முறையான வழிமுறையுடன் கண்காணிக்கப்பட வேண்டும். வெகுவிரைவில் இந்த சட்டம் திருத்தம் செய்யப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வில், தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக ஊடகத் தளங்களில் பரப்பப்படும், குறிப்பாக இலங்கையில் இன முறுகலை அல்லது கும்பல் வன்முறைகளைத் தூண்டும் தவறான தகவல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சுக்களின் உள்ளடக்கங்கள் பரப்புதலை கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்காக 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினி குற்றச்செயல்கள் தடுப்புச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் ஊடாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்தகைய ஆபத்தான உள்ளடக்கங்களைப் பரப்புவதைத் தடுப்பதற்காகச் சமூக ஊடக நிறுவனங்களுடன் தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களுடனும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்கீட்டாளர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு தண்டனைச் சட்டக்கோவை 20(120) ஆம் உறுப்புரையின் 6 ஆம் பிரிவின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.- என்றார். (எ)

# உள்நாட்டு விமானப் பயணங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, செப். 28

விமான சேவையின் பாதுகாப்புத் தன்மையில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் எமது நாடு உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. என்றாலும் உள்நாட்டு விமானப் பயணங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒரு நாடாக, நமது விமானப் பயணப் போக்குவரத்துப் பாதுகாப்புகள் உயர் மட்டத்தில் காணப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். விமானப் பாதுகாப்பு மதிப்பெண்ணில் எமது நாட்டுக்கான மதிப்பெண் 92 வீதமாக அமைந்து காணப்படுகிறது. இது நமது நாட்டில் விமானப் பயணப் போக்குவரத்து பாதுகாப்பைப் பொறுத்தவரை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இது உயர்மட்ட மதிப்பெண்ணாக அமைந்து காணப்படுகிறது.

இருப்பினும், ஒரு நாடாக, விமானப் போக்குவரத்து பாதுகாப்பை மேலும் மேம்படுத்த நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் குறிப்பாக, உள்நாட்டு விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் 2022ஆம் ஆண்டு ஹெலிகொப்டர் விபத்து ஒன்று இடம்பெற்றது. அதேபோன்று 2020,2021,2023 காலப்பகுதியிலும் உள்நாட்டு விமான பயணத்தின்போது விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

அதனால் உள்நாட்டு விமானப் பயணப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக அவசர நிலைமைகளின்போது செயல்படக்கூடிய திடீர் விபத்து சேவைப் பிரிவுகளை பிரதேச செயலக மட்டத்தில் அமைக்க வேண்டும்.- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டு யானைகள் தொல்லை சம்மாந்துறையில் அதிகரிப்பு

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

சம்மாந்துறை, செப். 28

சம்மாந்துறை பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. தங்கள் உயிர் மற்றும் சொத்துகளை பாதுகாப்பதற்காக அச்சத்துடன் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை சம்மாந்துறை, உடங்கா ஆகிய பகுதியில் காட்டு யானை ஒன்று வீட்டு மதில்களையும் கடை ஒன்றையும் பயன் தரும் வாழை மற்றும் தென்னை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளது.

இதனால் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேசத்தில் வாழும் மக்கள் இரவு வேளைகளில் காட்டு யானைகளின் தொல்லையால் அச்சமடைந்துள்ளனர்.

சம்மாந்துறை செந்நெல் கிராமம் 01, செந்நெல் கிராமம் 02 உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் காட்டு யானைகள் உட்புகுந்து வீட்டுத் தோட்டங்கள், வீட்டு மதில்கள், கடை அறைகள் போன்றவற்றை சேதப்படுத்திய சம்பவங்கள் தொடர்ந்து பதிவாகி வருகின்றன.

மேலும், தினமும் இரவு வேளையில் காட்டு யானைகள் நடமாடிக்கொண்டிருப்பதாலும், பிரதேச மக்களையும் பயன் தரும் பயிர் மற்றும் மரங்களையும் தாக்கி சேதப்படுத்திக் கொண்டிருப்பதனால் இரவு வேளைகளில் வெளியே செல்ல அச்சமடைந்துள்ளனர்.

அத்துடன், பொதுமக்களின் பாதுகாப்பு, பாடசாலை மற்றும் மத்ரஸா செல்லும் மாணவர்களின் நிலை என்பன பெரும் கவலைக்குள்ளாகியிருப்பதாகவும் காட்டு யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்தி விரைவில் நிரந்தரத் தீர்வு காண வனஜீவராசி பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் அரசு அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், சம்மாந்துறை பகுதியில் பல இடங்களில் காட்டு யானைகளை கட்டுப்படுத்த பாதுகாப்பு வேலி போன்ற தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கைகளை முன்வைத்த போதிலும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (எ)



# பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோக தடுப்புப் பிரிவு வவுனியாவில் திறப்பு

வவுனியா, செப். 28

வவுனியா, ஈச்சங்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோக தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸாருக்கான உணவகம் என்பன நேற்று முன்தினம் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தி. தனபாலவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# நீதி அமைச்சர் சமர்ப்பித்த சொத்து பிரகடனத்தில் கையெழுத்து இல்லை

## மக்களை ஏமாற்றுவது யார்? - தயாசிறி ஜயசேகர

கொழும்பு, செப். 28

நீதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள சொத்து விவரங்களில் அவரது கையெழுத்து இல்லை. இவ்வாறு சொத்து பிரகடனத்தில் ஆளுந்தரப்பு குறைபாடுகளை வைத்துக் கொண்டு, எதிர்க்கட்சியினர் மீது குறை கூறிக் கொண்டிருக்கிறது. எனவே, தமது வரிப்பணத்தை கொள்ளையடித்துள்ளது யார் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# திஸ்ஸ மஹாராமவில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 28

திஸ்ஸ மஹாராம சந்துங்கம பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 58 வயதான நபர் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த தாக்குதல்காரர், துப்பாக்கியால் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசாரணைகளின் போது, உயிரிழந்தவரின் மகனின் மனைவியுடன் சந்தேக நபருக்கு இருந்த உறவின் காரணமாகவே இச்சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்கான தீவிர விசாரணைகள் திஸ்ஸ மஹாராம பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ)

# ராஜித சேனாரத்னவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கொழும்பு, செப். 28

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகற்றும் பணியை கொரிய நிறுவனத்துக்கு ஒப்படைத்ததால் அரசாங்கத்துக்கு 2. 6 மில்லியன் ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படுத்தியதாக கூறி, முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளதாக நேற்று முன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த வழக்கு நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, விசாரணைகள் முடிவடைந்த பின்னர், சந்தேக நபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உபாலி லியனகே ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

அவர்கள் தற்போது நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு 2026 ஜனவரி 30 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (எ)

# யாத்திரிகர்கள் சென்ற வான் மரத்தில் மோதி கோர விபத்து

பதுளை, செப். 28

மஹியங்கனை - கிராதுருக்கோட்டை பிரதான வீதியில் உள்ள சொரபோர வெவ முதலாம் தூண் பகுதியில் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11. 00 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் வானில் பயணித்த 11 பேர் காயமடைந்து மஹியங்கனை மற்றும் பதுளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை பகுதியைச் சேர்ந்த இவர்கள் அநுராதபுரத்துக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்களில் 6 பேர் பதுளை மருத்துவமனையிலும், 5 பேர் மஹியங்கனை மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# ஒரே நிறுவன ஊழியர்களுக்குள் தகராறு; பெண் ஒருவர் கொலை

கொழும்பு, செப். 28

தாக்குதலில் படுகாயமடைந்து முல்லேரியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்தார்.

வெலிக்கடை பொலிஸ் பிரிவின் அங்கொடை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அங்கொடை பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய பெண்ணாவார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் அயல் வீட்டுக்காரர் எனவும் உயிரிழந்த பெண்ணும் சந்தேக நபரும் ஒரே நிறுவனத்தில் துப்புரவுப் பணியாளர்களாகப் பணியாற்றி வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

தகராறு ஒன்றைத் தொடர்ந்து சந்தேக நபர் குறித்த பெண்ணை ஆயுதம் ஒன்றால் தாக்கியதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் முல்லேரியா மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், வெலிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போரதீவுப்பற்றில் நாளொன்றுக்கு 22,000 லீற்றர் குடிநீர் விநியோகம்

மட்டக்களப்பு, செப். 28

மட்டக்களப்பு, மாவட்டத்தின் போரதீவுப் பற்று பிரதேசத்தில் நாளொன்றுக்கு 22,000 லீற்றர் குடிநீர் பௌசர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதற்கும் மேலாக இக்காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் இடம்பெறுகின்ற மரண வீடுகள், மற்றும் பொது நிகழ்வுகளுக்கும் நாம் குடிநீரை வழங்கி வருகின்றோம். எனது பிரதேச சபை மிகவும் வருமானம் குறைந்த சபையாக இருக்கின்ற போதிலும் நாம் மாதாந்தம் இரண்டு இலட்சத்து 32,000 இற்கும் மேற்பட்ட நிதியை செலவு செய்து வருகின்றோம் என்று போரதீவுப் பற்று பிரதேச சபை தவிசாளர் வி. மதிமேனன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கூறுகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் வறட்சி நிலமை காரணமாக எமது பிரதேச சபையால் குடிநீர் வழங்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போரதீவுப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட பல கிராமங்களில் சுத்தமான குடிநீரின்றி அங்குள்ள மக்கள் அவஸ்தை பட்டு வருகின்றனர். இந்த நிலையில் எங்களுடைய போரதீவுப் பற்று பிரதேச சபையால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஒத்துழைப்புடன் பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க 9 கிராமங்களுக்கு நாம் பௌசர்கள் மூலம் குடிநீர் வழங்கி வருகின்றோம்.

வருடாந்தம் ஏற்படும் வறட்சி நிலைமையை கருத்தில் கொண்டு எமது சபையால் இவ்வாறு குடிநீர் வழங்கி வருகின்றோம்.

எமது பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் பல சிறு குளங்கள் தூர்ந்துபோய் கிடக்கின்றன. அவ்வாறு காணப்படுகின்ற குளங்களை தூர்வாரல் செய்கின்றபோது மாரிகாலங்களில் கிடைக்கின்ற மழை நீரை சேமித்து அருகில் உள்ள கிணறுகளில் அவை ஊற்றெடுக்கும் பட்சத்தில் இவ்வாறான வறட்சி காலங்களில் குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு அது ஏதுவாக அமையும். எனவே எமது பிரதேசத்தில் காணப்படும் கிராமிய குளங்களை தூர்வாரல் செய்து புனரமைப்பு செய்ய வேண்டிய தேவையுள்ளது.

அதுபோல் இவ்வாறு கிராமிய குளங்கள் புனரமைப்பு செய்யப்படும் போது மேலதிகமாக பயிர்ச் செய்கைகளையும் வேளாண்மை செய்கையையும் மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் அப்பகுதி மக்களுக்கு கிடைக்கும். இதனால் எமது பிரதேச மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இதுதொடர்பான பல திட்ட முன்மொழிவுகளையும் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு நாம் அனுப்பி வைத்திருக்கின்றோம்.

பிரதேச சபை மூலம் நாம் குடிநீர் வழங்கி வரும் கிராமங்களுக்கு நிரந்தரமாக சுத்தமான குடிநீரை வழங்குவதற்குரிய 50 மில்லியன் ரூபாய்க்குரிய திட்ட முன்மொழிவுகளை முன்மொழிந்திருக்கின்றோம். மக்களின் நீர்த் தேவையை முற்றாக நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம்.

தற்போது நாளொன்றுக்கு 22, 000 லீற்றர் குடிநீரை பௌசர்கள் மூலம் விநியோகித்து வருகின்றோம் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.09.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், புரட்டாதி 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மாற்றம்

மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. அதிலும் பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று கூறுவது போல், இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி பல விடயங்களில் மாற்றங்களை நிர்ப் பந்திக்கின்றது. இந்த நிலையில், ஓரினச் சேர்க்கையாளர்களுக் கான உல்லாசத் துறைக்கு அரசாங்கம் அனுமதியளித்திருக் கின்றது. ஓரினச் சேர்க்கையாளர்கள் வந்து செல்வதற்கு இலங்கை மிகவும் பாதுகாப்பான இடம் என்னும் உலகளாவிய கவனத்தை ஈர்க்கும் நோக்கிலேயே இந்தத் திட்டத்திற்கு அரசாங் கம் அனுமதியளித்திருக்கின்றது.

ஓரினச் சேர்க்கை விவகாரத்திற்கு மத அடிப்படைவாதிகள் எப்போதுமே எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். உலகில் பல நாடுகளில் ஓரினச் சேர்க்கை சட்ட பூர்வமானதாக இருக்கின்றது ஆனாலும் உலகில் ஓரினச் சேர்க்கையாளர்களும் அதனை ஆதரிப்பவர்களும் தாக்கப்படும் சம்பவங்களும் தொடர்கின்றன. இது மேற்குலக நாடுகளிலும் உண்டு. குறிப்பாக மதத்தை முன் னிறுத்தி சிந்திப்பவர்கள் ஓரினச் சேர்க்கையை இயற்கைக்கு எதிரானது என்று விமர்சிப்பதுடன் அதனை எதிர்த்தும் வருகின் றனர்.

இலங்கையிலும் அவ்வாறான எதிர்ப்புக் குரல்கள் உண்டு. குறிப்பாக இஸ்லாமிய அடிப்படைவாதிகள் உலகெங்கும் ஓரினச் சேர்க்கைக்கு எதிரானவர்களாக இருக்கின்றனர். பல நாடுகளில் ஒரு பால் உறவுகள் தண்டனைக்குரிய குற்றமாகும். இலங்கை யின் தண்டணைக் கோவையும் அவ்வாறுதான் வரையறுத்தி ருக்கின்றது. எனினும் இதனை மாற்றியமைக்கப் போவதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. அரசாங்கத்திடம் தற்போதுள்ள பெரும்பான்மை பலத்தைக் கொண்டு அதனை மாற்றியமைக்கவும் முடியும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தேர்தல் வாக்குறுதி களில் ஓரினச் சேர்க்கையாளருக்கான உரிமைகள் பாதுகாக் கப்படும் என்பதும் ஒன்று. அதாவது ஒவ்வொரு குடியாளருக்கு மான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கையின் அரசி யல் வரலாற்றில் முதல் முறையாக ஒரு ஜனாதிபதி வேட்பாளர் இந்த விடயத்தை பொது வெளியில் பேசிய முதல் சந்தர்ப்பமும் இதுதான்.

ஜே.வி.பி. அடிப்படையில் இடதுசாரித்துவ பாசறையில் உருவாகிய ஓர் இயக்கம் என்றாலும் கூட. அது தன்னை ஆட் சிக்கு ஏற்ப மாற்றியிருக்கின்றது. மாற்றிக்கொள்ள வேண்டும் - மாற்றமில்லையேல் அரசியலில் சீவிக்க முடியாது. ஓர் இயக்கம் தன்னை மாற்றிக்கொள்ளவில்லை என்றால் அதனை மிதித்துக் கொண்டு மற்றவர்கள் சென்றுவிடுவார்கள். ஜே.வி.பி. இதனை புரிந்து கொண்டிருக்கின்றது. பொருளாதார ரீதியில் மீள வேண் டும், ஆட்சியில் தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்றால், நாட் டிற்குள் வருமானத்தை கொண்டுவருவதற்கான மார்க்கங்களை அடையாளம் காண வேண்டும். பொருளாதாரத்தில் உயரவில்லை என்றால் அனைத்தும் வீழ்ந்துவிடும். ஆனால், இந்த இடத்தில் தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆகக் குறைந்தது அரசியலமைப்பிலுள்ளவற்றை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்னும் எண்ணமும் மேலோங்கவில்லை. இதற்கு ஒரேயொரு காரணம்தான். தமிழர்களை தவிர்த்து பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது என்னும் நிலைமையை தமிழ் தரப்புக்களால் ஏற்படுத்த முடிய வில்லை. நிர்ப்பந்தங்கள் இன்றி மாற்றங்கள் இல்லை. இப்போ தைய மாற்றங்கள் அனைத்தும் பொருளாதார நெருக்கடி கொடுத்த நிர்ப்பந்தம்தான்.





பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய " தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர் காலம்" நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் கொழும்பு தமிழச் சங்கத்தில் நடைபெற்ற போது எழுத்தாளர் வசந்தி தயாபரன் தலைமையுரையை யும் எழுத்தாளர் வி.ரி. இளங்கோவன் வெளியீட் டுரையையும் தகவல் அறியும் உரிமை ஆணைக் குழு உறுப்பினர் ஏ. எம். நஹியா, கிழக்கு பல்க லைக்கழக நுண்கலைத்துறை பேராசிரியர் எஸ். ஜெய்சங்கர், சமூக, அரசியல் செயற்பாட்டாளர் யதீந்திரா, ஆய்வாளர் தெ. மதுசூதனன் ஆகி யோர் கருத்துரைகளை வழங்குவதையும் நூலா சிரியர் நன்றியுரையையும் நிகழ்த்துவதையும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவி சுகந்தி இராஜகுலேந் திரா நூலின் முதற்பிரதியை பெற்றுக்கொள்வதையும் சபை யோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



(அ)

## 3ஆவது நாளாக தொடரும் உண்ணாவிரத போராட்டம்!

யாழ்ப்பாணம், செப். 28

இலங்கையின் உள்நாட்டு பொறிமுறையை நிராகரித்து தமிழின அழிப்பு, வலிந்து காணமால் ஆக்கப்பட்டமை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித புதைகுழிகள் குறித்து சர்வதேச சுயாதீன விசார ணையை வலியுறுத்தி முன் னெடுக்கப்படும் சுழற்சி முறை யிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மூன்றா வது நாளாகவும் தொடர்ந்தது.

வலிந்து காணமாலாக்கப் பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினால் இந்த உண்ணா விரதப் போராட்டம் ஏற் பாடு செய்யப்பட்டு சுழற்சி முறையில் நடைபெற்று வருகிறது.



இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள், இளைஞர்கள், மக்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இவ் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட் டம் எதிர்வரும் முதலாம் திகதி வரை மாவட்ட ரீதியில் தொடர்ந்து இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-05)

## தடம் புரண்டது தண்ணீர் பவுசர்!


யாழ்ப்பாணம், செப். 28

பருத்தித்துறை நகரசபையின் அலட்சிய போக்கால் இன்று காலை 11:30 மணியளவில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் 751 பிரதான வீதியில் தண்ணீர் வண்டி தடம் புரண்ட சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

நேற்று பருத்தித்துறை நகர சபைக்கு சொந்தமான தண்ணீர் வண்டி மக்களுக்கு தண் ணீர் விநியோகம் செய்வதற்காக புறப்பட்டது.

அது பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 751 பிரதான வீதி வழியாக செல்லும் போது தடம் புரண்டது.


அந்த நேரம் அந்த வீதி வழியாக மக்கள்



பயணிக்காததால் அசம்பாவிதம் எதுவும் ஏற் படவில்லை.

(அ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிர்க்கப்பட வேண்டும் தற்கொலை!

இரா. சாந்தகுமார்

உலக சுகாதார நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையின்படி 2021-ஆம் ஆண்டில் உலக அளவில் 7,27,000 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். உலகில் ஏற்படும் மரணங்களுக்கான மூன்றாவது பெரிய காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் நிகழ்வுகள் அமைந்துள்ளன. இந்தியாவில் 1995-ஆம் ஆண்டு முதல் 2015-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சுமார் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களை வெல்வது கடினம் என மனதில் உருவாகும் எதிர்மறை எண்ணங்கள் மற்றும் அதன் விளைவாக ஏற்படும் மன அழுத்தமுமே தற்கொலைகளுக்குக் காரணமாக அமைகின்றன.


ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களே அன்றாட வாழ்க்கையில் அதிக அளவிலான சவால்களை எதிர்கொள்கின்றனர். அந்தச் சவால்களுக்கு எவ்வாறேனும் தீர்வு காண முடியும் என்ற மனவலிமை ஆண்களைக் காட்டிலும் பெண்களிடம் அதிகம் உள்ளது.

மன அழுத்தத்துக்கு உள்ளாகி தற்கொலை செய்துகொள்ளும் பெண்களின் எண்ணிக்கையைவிட ஆண்களின் எண்ணிக்கை இருமடங்கு இருப்பதே இதற்கு சான்று. மேலும், இதன்மூலம் பெண்கள் மனதால் பலவீனமானவர்கள் எனும் கற்பிதம் உண்மையல்ல என்பதும் நிரூபணமாகிறது.

தற்கொலை செய்து கொள்பவர்களில் இளவயதினரே அதிக அளவில் உள்ளனர். குறிப்பாக, 15 வயது முதல் 29 வயது வரையிலான இள வயதினர் அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

தற்காலச் சூழலில் 60 வயதைக் கடந்த முதியவர்களும் தற்கொலை செய்துகொள்வதாக ஊடகங்களில் தகவல்கள் அவ்வப்போது வெளியாகின்றன. தற்கொலை செய்து கொள்வோரில் சுமார் 10 வீதம் பேர் முதியவர்களாவர்.

ஒருவர் தற்கொலை செய்து கொள்வதன் மூலம் தான் சந்திக்கும் பிரச்னை முற்றுப் பெறுவதாகக் கருதலாம். ஆனால், தற்கொலை செய்துகொள்ளும் நபர், தான் எதிர்கொண்ட பிரச்னையைபோல் பன்மடங்கு பிரச்னையை தன்னைச் சார்ந்தவர்களுக்கு விட்டுச் செல்கிறார் என்பதே உண்மை.



கடனாளியான ஒருவர் தற்கொலை செய்துகொள்வதன் மூலம், தான் வாங்கிய கடனால் உண்டான பிரச்னையை தனது மனைவி, பிள்ளைகள் தோளில் ஏற்றி விட்டுச் செல்கிறார். குடும்பத் தலைவர் ஒருவர் தற்கொலை செய்துகொள்ளும்போது அவர் குடும்பமே பாதிக்கப்படுகிறது.

பல நேரங்களில் தற்கொலைகளுக்குத் தேவையற்ற எதிர்மறையான கற்பனைகளும், அச்சமுமே காரணங்களாக உள்ளன. பள்ளி இறுதித் தேர்வை சரியாக எழுதவில்லை என நினைத்து தற்கொலை செய்துகொண்ட பள்ளி மாணவி ஒருவர், அவர் எழுதிய தேர்வில் தேர்ச்சி பெற்றதோடு நல்ல மதிப்பெண் பெற்றதையும் இங்கே குறிப்பிட வேண்டும். சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் மீது தங்கள் விருப்பங்களைத் திணித்து அவர்களை மன அழுத்தத்துக்கு உள்ளாக்குகின்றனர்.

உடல் நலனையும், மனநலனையும் பாதிக்கும் மன அழுத்தத்தில் இருந்து வெளியே வருவதற்கான முதல் படி, கவலை தரும் மனச்சூழலிலிருந்து வெளியே வருதலாகும். அண்மையில் இளம் பெண் ஒருவர் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய நிலையில் தான் செய்துவந்த பணியை விட்டு விலகியதோடு சுய தொழிலில் ஈடுபட முடிவு செய்துள்ளார்.

பணம் சம்பாதிப்பதைவிட பணிச் சுமையால் ஏற்பட்ட மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதே நன்று என தான் முடிவு செய்ததாலேயே பணியிலிருந்து தான் விலகியதாக அந்த இளம் பெண் சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

2030-ஆம் ஆண்டுக்குள் உலகில் நடைபெறும் தற்கொலைகளில் 30 வீதம் குறைக்கப்பட வேண்டுமென்பது ஐ.நா. சபையின் குறிக்கோளாக உள்ளது. ஆனால், தற்கொலைச் சம்பவங்கள் நடப்பதைத் தடுப்பதற்கான உலக நாடுகளின் தற்போதைய சுமாரான நடவடிக்கைகளே தொடரும் நிலையில், சுமார் 12 வீத தற்கொலைகளை மட்டுமே 2030-ஆம் ஆண்டுவாக்கில் தடுக்க முடியும் எனத் தெரிகிறது.

உலகின் மொத்த மக்கள்தொகையான சுமார் 800 கோடி பேரில் 100 கோடி மக்கள் மனநலன் சார்ந்த பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. கூட்டுக் குடும்ப நடைமுறை சிதைந்துபோன நிலையில், குடும்ப உறவுகளுக்குள் ஒருவர் தம் மனக்கவலையை மற்றவரிடம் பகிர்ந்து ஆறுதல் தேடுவதென்பது அரிதாகி விட்டது.

நடந்து முடிந்த சோக நிகழ்வை நினைத்துக் கவலைப்படுவதால் மன அழுத்தம் மட்டுமே மிஞ்சுகிறது. மாறாக, மனதை தேற்றிக்கொண்டு தன்னம்பிக்கையுடன் செயல்படுவதன் மூலம் மனம் மகிழும் சூழல் ஏற்படும்.

'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பதற்கொப்ப நாம் மகிழ்ந்திருப்பதும், கவலையுற்று இருப்பதும் நம் செயல்களைச் சார்ந்ததே. ஓயாது நற்சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் மனதில், எவ்விதக் கவலைக்கும், மன அழுத்தத்துக்கும் இடமில்லை.

அழுத்தத்தால் மன நலன் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. மனநலன் பாதிக்கப்பட்ட பலர் தாங்கள் மனநலன் பாதிக்கப்படாதவர் என்பதை அறியாததுதான் வேதனையின் உச்சம். உடல் சார்ந்த நோய்களைப்போல் மனம் சார்ந்த நோய்கள் வெளிப்படையாகத் தெரிவதில்லை.

உறவினர்கள், நண்பர்களுடன் கலகலப்புடன், கலந்துரையாடுவது மன அழுத்தத்தைக் குறைப்பதோடு, மன அழுத்தத்துக்குக் காரணமான அச்சமும் கவலைகளும் விலகுவதற்கான தீர்வுகளும் கிடைக்க வாய்ப்புகள் உருவாகும்.'எத்துணை இடர்கள் வரினும், வாழ்க்கை இனிதாக வாழ்வதற்கே' என்ற மன உறுதியுடன் வாழ்ந்தால் தற்கொலைகளைத் தவிர்ப்பது மிக எளிது!. ●

## இந்தவார ராசிபலன் 28.09.2025 - 04.10.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 12
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சப்தமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். எண்ணிய எண்ணங்கள் யாவும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். வாடிக்கையாளரிடம், நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் நல்ல மனிதர்களின் தொடர்புகள் மனதில் மகிழ்ச்சியும், அமைதியும் நிலவும். வாழ்க்கையில் உங்கள் திறமையால் நல்ல முன்னேற்றங்களை அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். வியாபாரத்தில் புதிய திட்டங்களைத் தீட்டி இலாபத்தை அதிகரிக்க முயல்வீர்கள். தொழிலில் புதிய விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். அடிக்கடி கோபப்படுவது குறைப்பது நல்லது.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு எதிர்பார்ப்புக்கு மேல் தாராளமான பணவரவு அதிகரித்து மனமகிழ்ச்சி கூடும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றியும், பெரிய மகான்களின் தரிசனம் கிடைக்கும். பணிபுரியும் நண்பர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பால் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும். சாதுக்களின் தரிசனம் மற்றும் புண்ணிய கதைகள் கேட்டல் என பொழுது பக்தி மயமாக கழியும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்களுக்கு இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். எறும்பை ஒத்த, உங்கள் சுறுசுறுப்பு மிக்க செயல்பாடுகளை கண்டு அனைவரும் பாராட்டுவர். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து, எதிர்பார்த்தபடி தனவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடமிருந்து வெகு நாளாக எதிர்பார்த்திருந்த அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் தடங்கலின்றி வந்து சேரும். வீட்டில் திருமணம் போன்ற மகிழ்ச்சி கரமான சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் தொலை தூரச் சுபச்செய்திகள் எதிர்பார்க்கலாம். பெரியவர்கள் உதவியால் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். அரசுப் பணியில் பதவி உயர்வு எதிர்பார்க்கலாம். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். உறவுகளால் உதவியும் இருக்காது.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் யாவும் வெற்றிகரமாக முடியும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். பணிபுரியும் பெண்கள் தங்கள் அலுவலகத்தில் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். செயல்திறன் கூடும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் சுபகாரியங்களுக்கான முன்னேற்பாடுகளில் இல் லமே விழாக்கோலம் பூ ணு ம். திடீரென ஏற்படும், வியாபார சம்பந் தமான பயணங்களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சில ருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். எதிர்பாராத விதத்தில் பணியில் இட மாற்றங்கள் ஏற்படலாம்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. நல்ல லாபம், அதிக பலனோ கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். சிலருக்கு எல்லா விஷயத்திலும் ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். உயர்ந்த மனிதர்களின் நட்பு கிடைத்து வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் சீரான பொருளாதார உயர்வால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நெருங்கிய உறவுகள், அன்பு நண்பர்கள் அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத் தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். செல்வச் செழிப்பு நிலை உயரும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். எதிர்பாராத தனவரவு மூலம் ஏற்றம் காண்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றி களும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக நல்ல ஆலோ சனைகள் கிடைக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பணவரவு அதிகரிப்பால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும் வழக்குகளில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். விஐபி களின் நட்பின் மூலம் ஆதாயங்கள் பெறும் நிலை உருவாகும். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சி தனை அனுபவிப்பீர்கள். உங்கள் இல்லத்தில் நீண்ட இடைவேளைக்குப் பிறகு மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களால் மகிழ்ச்சி பொங்கும். ஆழ்ந்த மனக்கவலைகள் கூட அன்பு மனைவியின் அரவணைப்பால் குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அரசியலில் 'மீட்சி' குறித்து கனவுகாணும் மகிந்தவும் ரணிலும்





வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளில் இருவர் தங்களுக்கு இனிமேலும் கூட அரசியலில் 'மீட்சி ' இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் செயலில் இறங்கியிருக்கிறார்கள்.

தனிப்பட்ட வெளிநாட்டு விஜயத்துக்கு அரசாங்க நிதியைப் பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ' அரசியலமைப்புச் சர்வாதிகாரத்தை ' தோற்கடிப்பதற்காக எதிரணி அரசியல் கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சிகளை முன்னெடுத்திருக்கிறார்.

அதேவேளை, ஜனாதிபதிகளின் உரித்துரிமைகளை நீக்குவதற்கான சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து கொழும்பில் ஆடம்பரமான அரச மாளிகையில் இருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச தனக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ' அரசியல் பயங்கரவாதத்தில் ' ஈடுபடுவதாகவும் கூறி மக்கள் மத்தியில் மீண்டும் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

கடந்த மாதம் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் (கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் ) வைக்கப்பட்டபோது அனேகமாக சகல எதிரணிக் கட்சிகளுமே அவருக்கு ஆதரவாக குரலெழுப்பின. அவருடன் கடுமையான அரசியல் வேறுபாடுகளைக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகளும் கூட அரசாங்கம் அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டிருப்பதாக குற்றஞ்சாட்டினர்.

அந்தவேளையில் எதிரணிக்கட்சிகள் மத்தியில் ஏற்பட்டிருந்த உத்வேகத்தை பயன்படுத்தி அரசாங்கத்துக்கு எதிராக அணிதிரட்டலைச் செய்யலாம் என்று விக்கிரமசிங்கவும் அவரது ஐக்கிய தேசிய கட்சி அரசியல்வாதிகளும் நம்பினார்கள். ஆனால், அந்த உத்வேகம் ஒரு சில வாரங்களுக்குள்ளாகவே தணிந்துவிட்டது. அதற்கு பிறகு கடந்த வாரம் (செப்டெம்பர் 20) நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் 79 வது வருடாந்த மகாநாட்டை எதிர்க் கட்சிகளை ஐக்கியப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்துவதில் விக்கிரமசிங்க அக்கறை காட்டினார்.

ஆளும் தேசிய மக்கள் சக்தியை தவிர பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் உட்பட சுமார் 40 கட்சிகள் மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தன. அழைக்கப்பட்டவர்களில் முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா பண்டாரநாயக்க, மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் கலந்துகொள்ள முடியாதமைக்காக வருத்தம் தெரிவித்ததுடன் தங்களது வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர். எதிர்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச மகாநாட்டுக்கு வரவில்லை என்ற போதிலும் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க உட்பட மூத்த அரசியல்வாதிகள் பலர் கட்சியை அங்கு பிரதிநிதித்துவப்படுத்தினர். பிரேமதாசவின் செய்தியை மத்தும பண்டார வாசித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவோ அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவோ மகாநாட்டுக்கு வரவில்லை. பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார். ஐக்கிய மக்கள் சக்தியுடன் அணிசேர்ந்து நிற்கும் சகல தமிழ், முஸ்லிம் கட்சிகளினதும் தலைவர்கள் மகாநாட்டில் கலந்துகொண்ட அதேவேளை, வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களில் எவரும் பங்கேற்கவில்லை.

வழமையாக ஐக்கிய தேசிய கட்சியின் மகாநாடுகளில் அதன் முன்னாள் தலைவர்களுக்கே அஞ்சலி செலுத்தி கௌரவம் அளிக்கப்படும். ஆனால் இந்த தடவை ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் தலைவர்களுக்கு புறம்பாக, முன்னாள் பிரதமர்கள் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோருக்கும் முக்கியமான அரசியல் தலைவர்களாக விளங்கிய என். எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி சில்வா, பீற்றர் கெனமன், டி.ஏ. ராஜபக்ச, ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ். ஜே.வி. செல்வநாயகம், சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் ஆர். சம்பந்தன் ஆகியோருக்கும் நினைவஞ்சலி செய்யப்பட்டது.

மகாநாட்டில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் விக்கிரமசிங்க நிகழ்த்திய உரை கடந்த மாதம் கைது செய்யப்பட்டதற்கு பிறகு பொதுவெளியில் அவரின் முதன் முதலான உரையாக அமைந்தது. வழமைக்கு மாறாக வித்தியாசமான முறையில் தனது கட்சியின் வருடாந்த மகாநாடு இந்த தடவை நடத்தப்பட்டதற்கு பிரதான காரணம் தனது கைது என்பதை அவர் வெளிப்படையாகவே குறிப்பிட்டார். 2023 செப்டெம்பரில் கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் மேற்கொண்ட விஜயத்துக்கு பிறகு ஐக்கிய இராச்சியத்துக்கு சென்றதும் கூட உத்தியோகபூர்வ விஜயமே என்று விளக்குவதற்கு அவர் முயற்சித்ததை காணக்கூடியதாக இருந்தது.

கட்சியைப் பற்றி பேசுவதை விடவும் நாட்டில் இன்று உருவாகி வருகின்ற அரசியலமைப்புச் சர்வாதிகாரத்தை தோற்கடிப்பதற்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து பாடுபடவேண்டியதே அவசியமானது என்று விக்கிரமசிங்க வலியுறுத்தினார். மகாநாட்டில் பேசிய வேறு பல அரசியல்வாதிகளும் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவினதும் தேசிய மக்கள் சக்தியினதும் கண்காணிப்பில் இன்று நாட்டில் அரசியலமைப்புச் சர்வாதிகாரம் ஒன்று உருவாகிவருவதாக குறிப்பிட்டனர்.

அரசாங்கத்துக்கு எதிராக அணிதிரட்டல்களைச் செய்வதற்கு எதிரணி கட்சிகள் வாய்ப்புக்காக காத்திருக்கின்றன. ஆனால், விக்கிரமசிங்க அவரது கைதுக்கு பிறகு கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சிகளுக்கு தலைமை தாங்கக்கூடிய அளவுக்கு பலம் பொருந்திய ஒரு தலைவராக மாறிவிட்டாரா என்ற கேள்வி எழுகிறது. 1975 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்தனவின் தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி நாடுபூராவும் நடத்தியதைப் போன்று எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆயிரம் பொதுக்கூட்டங்களை நடத்த வேண்டும் என்று மாகாநாட்டில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால், அத்தகைய கூட்டங்களை முன்னின்று நடத்தக்கூடிய அளவுக்கு அவரது கட்சி பலம்பொருந்தியதாக இல்லை. தற்போதைய முக்கியமான எதிர்க்கட்சிகளில் எந்தவொன்றுமே பிரமாண்டமான கூட்டங்களை நடத்தக்கூடியதாக வலுவான கட்டமைப்புக்களை கொண்டவையாக இல்லை. அதன் வரலாற்றிலேயே மிகவும் மோசமான அளவுக்கு பலவீனப்பட்டிருக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையில் அணிதிரளுவதற்கு மற்றைய கட்சிகள் முன்வரக்கூடிய சாத்தியம் இல்லை.

மகாநாட்டில் உரையாற்றிய மற்றைய கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்கள் இதை தெளிவாக உணர்த்துகின்றன. ஐக்கிய தேசிய கட்சியுடன் தங்களுக்கு எந்தவிதமான இணக்கப்பாடும் கிடையாது என்றும் ஆனால், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக ஒன்றுபட்டுச்செயற்படத் தயாராக இருப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் மத்தும பண்டாரவும் பொதுஜன பெரமுன வின் பொதுச் செயலாளர் காரியவாசமும் மகாநாட்டில் அறிவித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி போன்ற பழைய முக்கியமான கட்சிகள் எல்லாமே பல குழுக்களாக பிளவடைந்திருக்கின்றன. அவை இன்றைய சூழ்நிலையில் அரசியலில் தங்களுக்கு ஒரு பொருத்தப்பாட்டை தேடிக் கொள்வதற்காக எதிர்க்கட்சிகளை ஒன்றிணைப்பதற்காக என்று கூறப்படுகின்ற முயற்சிகளில் வலிந்து பங்கேற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றன.

கடந்த மாதம் விக்கிரமசிங்கவின் கைதுக்கு பிறகு ஐக்கிய தேசிய கட்சி அதன் ஆதரவை கட்டியெழுப்புவதற்கு இரு முனைகளில் முயற்சிகளை முன்னெடுப்பதாக தெரிகிறது. ஒருபுறத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இறுதியில் இரு கட்சிகளையும் ஒன்றிணைப்பதும் மறுபுறத்தில், மற்றைய கட்சிகளுடன் சேர்ந்து பரந்தளவிலான அரசாங்க எதிர்ப்பு முன்னணி ஒன்றை அமைப்பதுமே அவர்களது நோக்கம்.

சஜித் பிரேமதாசவை பொறுத்தவரை, ஐக்கிய தேசிய கட்சியின் இந்த பொறியில் வீழ்ந்து விடக்கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கிறார். விக்கிரமசிங்க தலைமைத்துவத்தில் இருந்து விலகும் பட்சத்தில் எதிர்காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் தனக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் பிரேமதாச இரு கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்கு இணங்கக்கூடும். ஆனால், முன்னாள் ஜனாதிபதி கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்தோ அல்லது அரசியலில் இருந்தோ விலகுவதற்கான அறிகுறி ஏதுவுமில்லை. அதனால் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியில் தனது தலைமைத்துவத்தை மேலும் வலுப்படுத்துவதிலேயே அக்கறை காண்பிப்பார். அத்துடன் அவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் கூட அண்மையில் அறிவித்தார்..

மற்றைய எதிர்க்கட்சிகளை பொறுத்தவரை, ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைத்து அரசாங்கத்துக்கு எதிரான இயக்கத்தை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டினாலும் கூட தேர்தல் கூட்டு ஒன்றைச் செய்து கொள்வது சாத்தியமில்லை. பலம்பொருந்திய ஒரு கட்சியை மையமாக வைத்து கூட்டணியை அமைத்தால் மாத்திரமே தேர்தலில் வாய்ப்புக்களை அதிகரிக்க முடியும். ஐக்கிய தேசிய கட்சி அத்தகைய ஒரு நிலையில் தற்போது இல்லை என்பது மாத்திரமல்ல, அண்மைய எதிர்காலத்திலும் அதன் மக்கள் ஆதரவு குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரிப்பதற்கு வாய்ப்பில்லை.

கடந்த வருடத்தைய தேசிய தேர்தல்களின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய பெருவாரியான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கும் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பதில் அக்கறை காட்டாமல் விக்கிரமசிங்கவின் கைது போன்ற விடயங்களை முன்னிறுத்தி 'அரசியலமைப்புச் சர்வாதிகாரத்துக்கு' எதிராக அணிதிரளுமாறு விடுக்கப்படும் அழைப்பு மக்களின் கவனத்தை எந்தளவுக்கு ஈர்க்கும் என்பது இன்னொரு முக்கியமான கேள்வி.

இது இவ்வாறிருக்க, முன்னாள் ஜனாதிபதிகள் இது காலவரை அனுபவித்துவந்த மட்டுமீறிய வரப்பிரசாதங்களை இல்லாமல் செய்வதற்காக பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை தொடர்ந்து கொழும்பில் உள்ள அரச மாளிகையில் இருந்து வெளியேறி தனது சொந்த ஊரான அம்பாந்தோட்டையின் தங்காலைக்கு சென்றிருக்கும் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் அரசியல் பயங்கரவாதத்தில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டுகிறார்.

தங்காலை வாசஸ்தலத் துக்கு தினமும் பெரும் எண்ணிக்கையான ஆதரவாளர்கள் மாத்திரமல்ல, கொழும்பில் இருந்து வெளிநாட்டு இராஜதந்திரிகளும் அவரை சந்தித்து வருகிறார்கள். கொழும்பு மாளிகையில் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாமல் போனதால் அவருக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது என்றும் அரசாங்கம் அவருக்கு அநீதி இழைத்துவிட்டது என்றும் நாட்டு மக்கள் நினைக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தனது கட்சியின் செல்வாக்கை அதிகரிக்கலாம் என்று முன்னாள் ஜனாதிபதி நம்புகிறார் போலும். போரை முடிவுக்கு கொண்டு வந்ததால் தனக்கும் குடும்பத்தவர்களுக்கும் சிங்கள மக்கள் என்றென்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் இருந்து மகிந்த ராஜபக்ச 'அறகலய' அனுபவத்துக்கு பின்னரும் கூட விடுபடவில்லை.

இன்றைய அரசியல் நிலைவரத்தில் உள்ள விசித்திரம் என்ன வென்றால் ரணில் விக்கிரமசிக்கவும் மகிந்த ராஜபக்சவும் தங்களுக்கு அரசியலில் ஒரு 'மீட்சி' இருக்கிறது என்று நம்புவதுதான்! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு முன்னாலிருக்கும் தெரிவு



**கலாநிதி ஜெகான் பெரேரா**

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் கடுமை தளர்த்தப்பட்ட தீர்மானம் ஒன்றே நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு முடிவுக்கு வரவேண்டும் என்று அரசாங்கம் விரும்பும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கைகளுக்கும் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கும் பதிலளிக்க வேண்டிய தேவையில்லாமல் ( வருடத்துக்கு மூன்று தடவைகள் மேற்கொள்ளப்படும்) நடைமுறை நிரந்தரமாக முடிவுக்கு வரவேண்டும் என்று அரசாங்கம் பெரிதும் விரும்பும்.

ஆனால், அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்போது கடந்த அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் இலங்கை நழுவிச் செல்ல விடுவதற்கு சர்வதேச மனித உரிமைகள் சமூகம் தயாராக இல்லை. தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடருகின்றன. உதாரணத்துக்கு காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினை, நீண்டகால கைதிகள், வடக்கிலும் கிழக்கிலும் இராணுவமயமாக்கல் மற்றும் அதிகாரப் பலாக்கல் இல்லாமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான அடுத்த தீர்மானம் மென்மையானதாக இருக்கும் என்று நம்புவதற்கு காரணங்கள் இருக்கின்றன. தீர்மானத்துக்கு அனுசரணையாக செயற்படும் நாடுகள் சிலவற்றின் தார்மீக அதிகாரம் குறைந்து விட்டது ஒரு காரணமாகும். முழு உலகின் முன்னாலும் கட்டவிழும் மனித உரிமைகள் அனர்த்தங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் காரணமாக சர்வதேச மனித உரிமைகள் சமூகத்தின் உறுதிப்பாடு விட்டுக் கொடுக்கப்பட்டுவிட்டது. அரசாங்கம் உள்நாட்டில் அதற்கு நம்பகத்தன்மையை கொடுக்கக்கூடியதாக நிதி சம்பந்தப்பட்ட ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கு எதிராக எடுத்துவரும் நடவடிக்கைகள் தெளிவான முன்னேற்றத்தை கண்டுவருவது இன்னொரு காரணமாகும்.

ஆளும் தேசிய மக்கள் சக்தி 2024 ஆம் ஆண்டில் ஒரு வலிமையான ஆணையுடன் பதவிக்கு வந்தது. தண்டனையின்மையை முடிவுக்கு கொண்டு வருவதாகவும் கடந்த காலத் தவறுகளுக்கு காரணமானவர்களை பொறுப்புக்கூற வைப்பதாகவும் சகல குடிமக்களையும் சமத்துவமானவர்களாக நடத்துவதாகவும் தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்தது. அரசாங்கம் அதன் ஆணையை பின்பற்றுகின்ற அளவைப் பொறுத்தவரை, ஒரு ஜனநாயகம் என்ற வகையில் அதன் உரிமைகளின் எல்லைகளுக்குள்ளேயே நிற்கிறது.

ஒரு காலத்தில் முன்னுதாரணமாக விளங்கிய பல நாடுகளில் வெளிநாட்டவர் பற்றிய பீதியும் சகிப்புத்தன்மை இன்மையும் மேலோங்கிக் காணப்படுகின்ற இன்றைய உலகில் இலங்கை விதிவிலக்கா னதாக இருக்கிறது. இனம் அல்லது மதத்தைப் பொருட்படுத்தாமல் சகல குடிமக்களையும் சமத்துவமானவர்களாக நடத்துவதில் சொல்லிலும் செயலிலும் அரசாங்கம் அக்கறையுடனான முயற்சியொன்றை முன்னெடுக்கிறது. நாட்டில் தாங்கள் சமத்துவமான இடத்தையும் சமத்துவமான பங்கையும் கொண்டிருப்பதாக சகல சமூகங்களும் உணருவதற்கும் நம்புவதற்கும் முன்னதாக இன்னமும் நீண்ட தூரம் செல்ல செல்ல வேண்டியிருக்கிறது.


தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் அரசாங்க நியமனங்கள் விடயத்தில் இதை குறிப்பாக கவனிக்கக்கூடியதாக இருக்கிறது. அந்த பகுதிகளில் உயர்மட்ட அதிகாரிகள் தொடர்ந்தும் சிங்களவர்களாகவே இருக்கிறார்கள். தமிழ் மொழிபெயர்ப்பு இல்லாமல் சிங்கள மொழியின் பயன்பாடு நாட்டின் நிருவாக வாழ்வில் தமிழ்பேசும் மக்களின் முழுமையான பங்கேற்புக்கு தொடர்ந்தும் தடையாக இருந்து வருகிறது.

போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை தீர்மானிப்பதற்கு சர்வதேச பொறிமுறையோ அல்லது கலப்பு பொறிமுறையோ வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் கோராமல் இருப்பதில் இருந்து இந்த தடவை மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் மென்மையானதாக இருக்கக்கூடிய சாத்தியம் தெரிகிறது. பதிலாக, அவர்கள் நீதியை வழங்கக்கூடிய நம்பகத்தன்மை கொண்ட உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றையே கோருகிறார்கள். மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் வாக்கெடுப்பு இல்லாமல் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. தீர்மானத்துக்கு அனுசரணை வழங்குகின்ற பலம்பொருந்திய தனவந்த நாடுகளுடன் மோதலுக்கு போவதை அரசாங்கம் விரும்பவில்லை என்று தோன்றுகிறது.

பலம் பொருந்திய நாடுகள் பலம் குறைந்த நாடுகளை நடத்துகின்ற முறையில் பெருமளவுக்கு ஈவிரக்கம் இல்லாமல் செயற்படுகின்ற ஒரு உலகில் ஒரு இலக்காக வந்துவிடக்கூடாது என்பதில் கரிசனை கொண்டு இலங்கை அரசாங்கம் அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பது அறிவுபூர்வமானதாகும். இதன் காரணத்தினால்தான் ஒரு இணக்கப்போக்கான சமிக்கைகளை காண்பித்து அரசாங்கம் உள்நாட்டுப் பொறிமுறை சிறந்த முறையில் செயற்படுவதற்கு வசதியாக அதே நாடுகளிடம் செயல்நுட்ப உதவிகளை பெறுவதற்கு விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறது போலும்.

ஆனால், செயல்நுட்ப உதவிகளை ஏற்றுக்கொள்வதற்கு முன்வரும் அதேவேளை, அதை நாட்டில் நடைமுறையில் காண்பிப்பதில் அரசாங்கம் காண்பிக்கின்ற தாமதம் சர்வதேச சமூகத்துக்கு விரக்தியை ஏற்படுத்தியிருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மையப் பொருளான போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பில் அரசாங்கம் மெதுமெதுவாகவே நகர்கிறது.

மனித உரிமைகள் பேரவையின் 46-1 தீர்மானத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டம் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களை தொடர்ந்தும் திரட்டி சேகரித்து வருகிறது. மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய கூட்டத்தொடரில் வரவிருக்கும் தீர்மானம் வெளிப் பொறிமுறை அல்லது கலப்புப் பொறிமுறை வேண்டும் என்ற கோரிக்கையை கொண்டிருக்கப் போவதில்லை என்பதற்கான அறிகுறிகள் தெரிவதால் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டம் நெருக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. புதிய தீர்மானம் கடந்த கால தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டதைப் போன்ற உள்நாட்டுப் பொறிமுறைக்கு ஆதரவானதாக இருக்கக்கூடிய சாத்தியம் உள்ளது.



**இலங்கை ஒரு நிலைமாறு காலகட்டத்தில் இருக்கிறது. தேசிய மக்கள் சக்தி மாற்றத்துக்கான வலிமையான ஆணையொன்றுடன் பதவிக்கு வந்தது. இந்த சாளரத்தை நீதியை வழங்குவதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.**

அரசாங்கம் அதன் உள்நாட்டுப் பொறிமுறையை சிறப்பாகச் செயற்பட வைப்பதற்காக வெளிநாட்டு அரசுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்புகளிடமிருந்து செயல்நுட்ப உதவியைப் பெறுவதற்கு தயாராயிருக்கிறது போன்று தெரிகிறது. ஆனால், எதிர்பார்க்கப்படும் வேகத்தில் அல்லது வெளிப்படைத் தன்மையுடன் அரசாங்கம் நகரவில்லை. தற்போதைய அரசாங்கம் மாத்திரம்தான் போர்க்குற்றங்கள் தொடர்பான விவகாரத்தை கையாளுவதில் தாமதமாகச் செயற்படுகின்றது என்றில்லை. முன்னைய அரசாங்கங்களும் அவ்வாறே செயற்பட்டு வந்தன.

முன்னைய அரசாங்கங்களும் பொறுப்புக்கூறலுக்கான தேவை தொடர்பில் மழுப்பல்தனமாக அல்லது நிராகரிக்கும் தொனியிலேயே பேசிவந்தன. போரில் வெற்றி பெற்ற இராணுவத்தின் உறுப்பினர்களை போர்க் குற்றங்களுக்காக விசாரணைக்கு உட்படுத்துவது என்பது அரசியல் ரீதியில் சவாலானதாகும். ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகளைப் பற்றிய பயம் அரசாங்கத்துக்கு இருக்கும்.

பொறுப்புக்கூறல் திசையில் முதல் நடவடிக்கையாக அரசாங்கம் இராணுவப் போர்க்களத்துக்கு வெளியில் இழைக்கப்பட்ட குற்றங்கள் மீது கவனத்தைச் செலுத்த விரும்பக்கூடும். மிரட்டிப் பணத்தை பெறுவதற்காக ஆட்கள் கடத்தப்பட்டு பணயம் வைக்கப்பட்ட சம்பவங்கள் இவற்றில் அடங்கும். கடத்தப்பட்டவர்களின் குடும்பங்களிடமிருந்து பணம் கிடைக்காத பட்சத்தில் அவர்கள் கொல்லப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றன.

இராணுவப் போர்க்களத்துக்கு வெளியில் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்ற குற்றங்களுக்காக அல்லது அத்தகைய குற்றங்கள் பற்றி தெரிந்திருந்தமைக்காக மிகவும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் கைதுசெய்யப்படுவது தொடக்கநிலை பொறுப்புக்கூறல் செயற்திட்டம் ஒன்றின் முதற்கட்டமாக இருக்கிறது போன்று தோன்றுகிறது. இது கட்டளைப் பொறுப்புக் கோட்பாட்டுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். தளபதிகள் தங்களுக்கு கீழ் உள்ளவர்கள் குற்றங்களைச் செய்யும்போது தடுப்பதற்கு முயற்சிக்கவில்லையானால், அவற்றுக்கான பொறுப்பை ஏற்கவேண்டிய தேவை பற்றியதே இந்த கோட்பாடு. அரசாங்கங்கள் கட்டளைப் பொறுப்புக் கோட்பாட்டை அலட்சியம் செய்யும்போது அவை தண்டனையின்மைக் கலாசாரத்தை தோற்றுவிக்கின்றன.

கட்டளைப் பொறுப்பின் முக்கியத்துவம் பல சர்வதேச விசாரணை மன்றங்களினாலும் தேசிய சட்டங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அண்மைய மாதங்களாக கவனம் மனிதப்புதைகுழிகள், ஆட்கள் வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் மற்றும் மந்தகதியிலான உள்நாட்டு விசாரணைகள் மீது திரும்பியிருக்கிறது. யாழ்நகருக்கு அண்மையாக செம்மணி மனிதப்புதைகுழிப் பகுதி அடையாள முக்கியத்துவமுடையதாகும். பெரும் எண்ணிக்கையானவர்கள் தடுத்துவைக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து விரிவான பதிவுகள் இருக்கின்றன.

1990 களின் முற்பகுதியில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் தங்கமுத்து ஜெயசிங்கம் வந்தாறுமூலை அகதிகள் முகாமுக்கு பொறுப்பாக இருந்தபோது இளம் பையன்கள் உட்பட 158 பேர் 1990 செப்டெம்பர் 5 ஆம் திகதி அவரின் கண் முன்னாலேயே கைதுசெய்யப்பட்டு கூட்டிச்செல்லப்பட்டனர். அவர்களை மீண்டும் ஒருபோதுமே காணக்கூடியதாக இருக்கவில்லை. ஆனால், இன்னமும் கூட இலங்கையில் எந்தவொரு மனிதப்புதைகுழியோ அல்லது ஆட்கள் பெரும் எண்ணிக்கையில் கடத்திச்செல்லப்பட்ட சம்பவமோ தீர்க்கமான நீதித்துறை முடிவுக்கு வழிவகுக்கவில்லை. செயல்நுட்ப ஆற்றலின்மை, அரசியல் துணிச்சல் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நிலவும் அவநம்பிக்கை ஆகியவை தொடர்ந்து நீடிக்கின்ற மெய்யான பிரச்சினைகளாக இருக்கின்றன.

செம்மணியிலும் வேறு இடங்களிலும் உள்ள மனிதப் புதைகுழிகள், பெரும் எண்ணிக்கையில் ஆட்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் இராணுவப் போர்க்களத்துக்கு வெளியில் இடம் பெற்ற கொலைகளாக கருதப்படும். அத்தகைய குற்றச் செயல்களுக்காக பொறுப்புக்கூற வைக்கப்படுவது தேசியவாத உணர்வுகளை தோற்றுவிக்கக்கூடிய சாத்தியம் குறைவு. அதனால் இந்த இடத்தில் பொறுப்புக்கூறலுக்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதுவரையில் அதன் சொல்லிலும் செயலிலும் நேர்மையை வெளிக்காட்டியிருக்கிறது.

இலங்கை ஒரு நிலைமாறு காலகட்டத்தில் இருக்கிறது. தேசிய மக்கள் சக்தி மாற்றத்துக்கான வலிமையான ஆணையொன்றுடன் பதவிக்கு வந்தது. இந்த சாளரத்தை நீதியை வழங்குவதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். மீண்டும் தாமதிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துமானால், அதன் மீது வைத்த நம்பிக்கை வீணாகிவிடும். அது மிகுந்த கவனத்துடனும் ஒளிவுமறைவின்றி நேரடியாகவும் முன்னோக்கி நகருமானால், உறுதியளிக்கப்பட்ட பொதுவான அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்பவும் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்காக குறிவைக்கப்படும் நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்கக்கூடியதாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காட்டான்

# தமிழின அழிப்புக்கு பொறுப்புக்கூறல் இல்லை! தமிழினப் பிரச்னைக்கு அரசியல்தீர்வு இல்லை!



அநுரதபுரத்திலுள்ள தம்புத்தேகம என்ற விவசாய கிராமத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற முதலாவது இளைஞன், புரட்சிகர சிந்தனை வழியாக உருவான ஜே.வி.பி.யின் கவர்ச்சிமிகு பேச்சாளராக, செயல்பாட்டாளராக வளர்ந்து, அரசியல்வாதியாகி இறுதியில் நாட்டின் ஜனாதிபதியாகி ஒரு வருடமாகிவிட்டது.

முன்னைய நாட்களில் ஒருவர் பிரதமராக அல்லது ஜனாதிபதியாகினால் பதவியேற்ற முதலாவது ஆண்டு பெரும் எடுப்பில் வழிபாடுகள், விருந்துபசாரங்கள், பத்திரிகைகளில் முழுப்பக்க வாழ்த்துப் படங்கள் என கொண்டாட்டம் மக்களின் வரிப்பணத்தில் அட்டகாசமாக இடம்பெறும்.

ஆனால், அநுர குமர திஸ்ஸநாயக்கவின் முதலாவது வருட பூர்த்தியில் அவ்வாறான கொண்டாட்டங்களுக்குப் பதிலாக, தேர்தல் கால உறுதிமொழிகள் எதனையும் அவர் செய்யவில்லை - மக்களை அவர் ஏமாற்றிவிட்டார் என்ற பாணியில் பல்வேறு கட்சிகளின் கண்டன அறிக்கைகளையே பார்க்கவும் கேட்கவும் முடிந்தது. இந்தக் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லையென எவரும் கூற முடியாது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகளும் கண்டனத் தாக்குதல்களுமே அவரது அரசியலுக்கு ஆதாயமாக அமைந்துவிடக்கூடிய சாத்தியமுண்டு. இதற்கு உதாரணமாக 1950களின் பிற்பகுதியில் பிரதமராகவிருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க பற்றிய ஒரு விடயத்தை அவரது வாழ்க்கை வரலாற்றின் நூலில் பார்க்கலாம். தினமும் காலையில் பத்திரிகைகளைப் படிப்பது அவரது வழக்கம். தம்மைப் பாராட்டியும், உயர்த்தியும் வரும் செய்திகளை அவர் விரும்பவில்லை. மாறாக தம்மை விமர்ச்சித்து வரும் விடயங்களே தமது வளர்ச்சிக்கு தேவையென பண்டாரநாயக்க கருதினாரென்று அந்த நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுர குமர ஜனாதிபதியானதும் தம்மை மேன்மை தங்கிய, அதிஉத்தம அடைமொழிகளுடன் அழைக்க வேண்டாமெனவும், தோழர் ஜனாதிபதி என்றால் போதும் எனவும் கூறியிருந்தார். பொதுநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போதும், திறப்பு விழா நிகழ்வுகளில் திரை நீக்கம் செய்யப்படும் ஞாபகக் கற்களிலும் அவ்வாறே இடம்பெற வேண்டுமெனவும் அக்கறை காட்டி வருகிறார். இதனால் தம்மை உயர்வர்க்க மனிதராகக் காட்டிக் கொள்ளாது சாதாரணமானவர்களில் ஒருவராக நிலைநிறுத்துவதில் அக்கறையாக உள்ளார்.


அண்மையில் இவர் உரையாற்றிய பொதுக்கூட்ட காணொளி ஒன்றை பார்க்க முடிந்தது. அவரது உரை பின்வருமாறு ஆரம்பமாகியது. 'இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவர் 1930களிலிருந்து அரசியலில் ஊறிவந்தவர். இன்னொரு ஜனாதிபதியின் பெற்றோர் இருவரும் பிரதமர்களாக இருந்தவர்கள். இன்னொரு ஜனாதிபதியின் தமையனார் ஜனாதிபதியாக இருந்தவர். இறுதியாக ஜனாதிபதியாக இருந்தவர் முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் மகன் முறையான இரத்த உறவினர். நான் அவ்வாறான குடும்ப பாரம்பரியம் இல்லாது வந்த ஒரு கிராமத்துப் பெடியன்' என்ற தம்மைப் பற்றிய இவரது அறிமுகம் மக்கள் மனதில் இலகுவாக மேடையேறும் தன்மை வாய்ந்தது.

இவ்வாறெல்லாம் இங்கு குறிப்பிடுவதால், இவர் சொன்ன சொல் தவறாதவர், உறுதிமொழிகளை நிறைவேற்றுபவர், அனைத்து மக்களையும் சரிசமமாக மதிப்பவர், சிறுபான்மை இனங்களின் பிரச்னைகளுக்கு தீர்வு தருபவர் என்று நம்பகத்தன்மையை கொள்ள முடியாது. ஒரு வருடத்துக்குள் அவ்வாறான ஒரு முடிவுக்கு வரக்கூடாதென்பதற்கு கடந்த கால ஆட்சித் தலைமைகளிடம் கற்றுக் கொண்ட பாடங்கள் நிரம்பவே உள்ளன.

தேர்தலுக்குப் பின்னரான ஆட்சிக் காலம் ஐந்து வருடங்கள் மட்டுமே. இதில் முதல் ஆறு மாதங்கள் முன்னைய ஆட்சிக் காலத்தில் முக்கிய பதவி வகித்தவர்களை அடையாளம் கண்டு அப்புறப்படுத்துவது அல்லது இடமாற்றம் செய்வது. அடுத்த ஆறு மாதங்கள் தங்கள் ஆதரவாளர்கள், நம்பிக்கையானவர்களால் அந்த இடங்களை நிரப்புவது. இதனை அரசியல் பழி வாங்கல், பந்தங்களை உள்ளெடுப்பது என்றும் அரசியல் அகராதியில் கூறுவர். இரண்டாவது வருடமே உருப்படியாக செய்வதற்கான காலம். அதுவும் முடிந்தால் மூன்றாவது வருடம் அடுத்த தேர்தலை நோக்கி காய்களை நகர்த்தும் காலம். இதுவே தேர்தல்வரை தொடரும்.

அநுர குமரவின் இரண்டாவதாண்டு பணிக்காலம் ஆரம்பமாகியுள்ளது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்ற அதிகாரம் அவருக்குள்ளது. திரிகரண சுத்தியுடன் சில பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமென அவர் விரும்புவாரானால் அதற்கான காலம் இதுதான். ஆனால் இந்தச் சிந்தனையும் விருப்பமும் அவருக்கும் அவரது சக தோழர்களுக்கும் இருக்கிறதா என்பதுவே இப்போதுள்ள கேள்வி.

**எந்தக் கட்சி அரசாங்கம் அமைத்தாலும் தமிழின அழிப்புக்கு பொறுப்புக்கூற தயாரில்லை. இது ராணுவத்தைக் காட்டிக்கொடுத்து விடுமாம். எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு இல்லை. சிங்கள பௌத்தத்தில் இதற்கு இடமில்லையாம்.**







நேற்றைய (செப்டம்பர் 27) ஈழநாடு பத்திரிகையின் முதலாம் பக்க தலைப்புச் செய்தி இதற்கான பதிலாக அமைந்துள்ளது. 'எந்தவோர் அழுத்தத்துக்கும் அடிபணியத் தயாராக இல்லை - அமெரிக்காவில் கூறினார் ஜனாதிபதி அநுர' என்பது இச்செய்தியின் தலைப்பு. 'நாட்டு மக்களின் அபிலாசைகள் மற்றும் நம்பிக்கைகளுடன் மட்டுமே தாம் கட்டுப்பட்டிருப்பதாகவும் ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த அரசை தெரிவு செய்த மக்கள் வைத்துள்ள அபிலாசைகளை நிறைவேற்றுவதில் எந்தவோர் அழுத்தத்துக்கும் அடிபணியத் தயாராகவில்லை' என்று ஜனாதிபதி அநுர குமர திஸ்ஸநாயக்க தெரிவித்ததாக இச்செய்தியின் முதலாவது பந்தி கூறுகிறது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி ஒருவரின் நினைவும் செயலும் இவ்வாறு இருக்க வேண்டியது அவசியம். ஆனால் அமெரிக்காவிலுள்ள இலங்கையர் மத்தியில் இவர் இதனைக் கூறியதன் அர்த்தம் என்னவென்பது புரியாதுள்ளது.

பொருளாதார மீட்சி, ஊழல் ஒழிப்பு, புதிய அரசியலமைப்பினூடாக இனப் பிரச்சனைக்கு தீர்வு என்பவை தேர்தல் காலங்களில் இவரால் உறுதியளிக்கப்பட்டவைகளில் முக்கியமானவை. இவைகளை நிறைவேற்றுவதற்கு எவரும் தடையாக இருப்பதாகச் சொல்ல முடியாது. ஜனாதிபதியாகிய பின்னர் கடந்த ஒரு வருடத்துள் இந்தியா, சீனா, மாலைதீவு, ஐக்கிய அரபு இராஜ்ஜியம், ஜேர்மனி, வியட்நாம், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்துள்ளார். இப்பயணங்களின் இலக்கு பொருளாதார மீட்புக்கான உதவி பெறுவது. இதில் அவர் வெற்றியும் பெற்றுள்ளார். சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து உதவியளித்து வருகிறது. அமெரிக்கா புதிய வரிவிதிப்பில் சலுகை காட்டியுள்ளது.

உள்நாட்டு ஊழல் ஒழிப்புக்கு உலகின் எந்த நாடும் எதிர்ப்புக் காட்டவில்லை. இதனை உள்நாட்டு விவகாரமாகவே அவை பார்க்கின்றன. தேர்தல் காலங்களில் சொன்னது செயற்படுத்தப்படுகின்றது என்று இதனை அந்நாடுகள் எடுத்துக் கொண்டுள்ளன.

இதுவரை திரும்பிப் பார்க்காத ஒரு பக்கம் உண்டென்றால் இனப்பிரச்னைக்கான தீர்வு மட்டுமே. இதனை தமிழர் பிரச்சனை என்று நேரடியாகவே கூறலாம். ஒரு வருடத்துக்குள்ளேயே இவ்விடயத்தை அநுர மறந்துவிட்டது போலவே தெரிகிறது. இலங்கையின் புதிய பொருளாதார சீர்திருத்தத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஆதரவு என்று அதன் செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டறஸ் ஜனாதிபதி அநுரவிடம் நேரடியாகத் தெரிவித்ததாக செய்திகள் கூறுகின்றன. பொறுப்புக் கூறலுக்கு சர்வதேச நீதிவிசாரணை பொறிமுறையை ஜெனிவாவில் மனித உரிமைகள் ஆணையகம் கடந்த மாதமும் கூறிய போது அது அநுர அரசால் நிராகரிக்கப்பட்டது.

அண்மைக் காலங்களில் அரச செயல்பாடுகள் பற்றிக் கூறும்பொழுது இனப் பிரச்சனை தீர்வு என்பது மறக்கப்பட்ட ஒன்றாக தள்ளப்படுகிறது. பொருளாதார மீட்பு என்பதே அரசின் முக்கிய செயல்பாடாக காட்டப்படுகிறது. எப்போதாவது இனப்பிரச்சனை பற்றி பேசும்போது புதிய அரசியலமைப்பினூடாக இப்பிரச்சனைக்கு அனைவரும் ஏற்கும் வகையில் தீர்வு காணப்படுமென சொல்லப்படுகிறது.

இலங்கை - இந்திய ராஜிவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்த ஜே.வி.பி. 13ம் திருத்தம், மாகாண சபை என்பவற்றை நடைமுறைப்படுத்துமென நம்பமுடியாது. ஆனால், மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமென்றே மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது. சீனாவுக்கு விஜயம் மேற்கொண்ட பின்னர் ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்த கருத்தொன்று அதிமுக்கியமானது. பதினைந்து அல்லது இருபது ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி புரிந்தால் மட்டுமே நாட்டை பல துறைகளிலும் அபிவிருத்தி செய்ய முடியுமென்பது இவர் வெளியிட்ட கருத்து.

இதுவே ஜே.வி.பி.யின் திட்டமாக விருப்பின் ஒரு கட்சி ஆட்சியே பல வருடங்களுக்கு தொடரும் அபாயம் காணப்படுகிறது. இதனையே சகல அரசியல் கட்சிகளும் அண்மையில் கூட்டிக்காட்டி வருகின்றன. நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு அதிகாரம் தேசிய மக்கள் சக்தியின் விருப்பங்களுக்கேற்றவாறு அரசியல் சட்டங்களை மாற்றியமைக்க சாத்தியப்படும். நாடாளுமன்றத்தின் நிகழ்கால செயற்பாடுகள் சில இதற்குக் கட்டியம் கூறுகின்றன.

இதுவே ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தியின் அடிப்படை கொள்கையானால் ஒரு கட்சி ஆட்சி என்பது நிலைபேறாகிவிடும். அதன் பின்னர் புதிய அரசியலமைப்பு, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பவை கானல் நீர்தான். இதனைத்தான் 'எந்தவோர் அழுத்தத்துக்கும் அடிபணிய தயாராக இல்லை" என்று ஜனாதிபதி அநுர குமர தெரிவித்தாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதா வி

# ஒரே இரவில் நாடற்றவராக அறிவிக்கப்பட்ட ஈழத்தமிழர்:

## பிறந்தது இந்தியாவில்தான், ஆனால் குடியுரிமை இல்லை!



சென்னையில் வசிக்கும் ஆர். பகிசன் (34) இந்திய பாஸ்போர்ட் உட்பட இந்திய குடிமகனுக்கு வழங்கப்படும் பல ஆவணங்களை கொண்டுள்ளார். சென்னையில் தனது பள்ளிப் படிப்பையும், கல்லூரி படிப்பையும் முடித்து ஒரு தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து வருகிறார். அவர் பாஸ்போர்ட்-ல் தனது மனைவியின் பெயரை சேர்க்க விண்ணப்பித்த போது அவரது பெயரை சேர்த்து இந்த ஆண்டு மார்ச் மாதம் பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் பாஸ்போர்ட் வழங்கிய பின்னர், அவர் பாஸ்போர்ட் பெற்றிருப்பது சட்டவிரோதமானது என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். அவரது பெற்றோர் இருவரும் இலங்கை நாட்டவர். 1991-ம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டுப் பிரச்னை ஏற்பட்ட போது அகதிகளாக இந்தியாவுக்கு வந்தனர். பகிசன் தமிழ்நாட்டிலேயே பிறந்து, 30 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கேயே தொடர்ந்து வசித்து வந்தாலும், அவரது பெற்றோர் இருவரும் இந்தியர் அல்ல (இலங்கை நாட்டவர்) என்பதால் அவர் இந்திய குடிமகனாக கருதப்பட மாட்டார், எனவே அவர் 'நாடற்றவர்' என்று தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து பகிசன், இந்திய குடியுரிமைக்காக விண்ணப்பித்துள்ளார்.

இந்திய குடியுரிமைச் சட்டத்தின் படி, 1987-ம் ஆண்டுக்கு ஜூலை 1ம் தேதி அல்லது அதன் பின் இந்தியாவில் பிறந்த ஒருவரது பெற்றோரில் யாரேனும் ஒருவர் இந்தியராக இருந்தால் மட்டுமே, அவர் இந்திய குடியுரிமை பெறமுடியும். மேலும், பெற்றோர் இருவரும் 'சட்டவிரோத குடியேறிகளாக' இருக்கக் கூடாது.

இந்தியாவில் அகதிகள் குறித்த தேசிய அளவிலான தெளிவான சட்டமும் கொள்கையும் இல்லாததால், இலங்கை தமிழர்கள், தமிழ்நாட்டில் பல தசாப்தங்களாக வசித்து வந்தாலும் அவர்கள் 'சட்டவிரோத குடியேறிகளாகவே' கருதப்படுகின்றனர். இந்திய குடியுரிமை சட்டம் 1955 பிரிவு 2(1) (டி) நாடற்றவர்களையும், அகதிகளையும் 'சட்டவிரோத குடியேறிகள்' என்று வரையறுக்கிறது.

"நான் எப்போதுமே என்னை இந்திய குடிமகனாகவே நினைத்திருக்கிறேன். இத்தனை ஆண்டுகளில் யாரும் என்னை இந்திய குடிமகன் இல்லை என்று எங்கும் கூறியதில்லை. என்னிடம் உள்ள ஆவணங்களை முறையாகவே பெற்றுள்ளேன். என் பெற்றோர் இலங்கை நாட்டவர் என்பதை எங்கும் மறைத்ததில்லை.

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் காவல் நிலையத்துக்குச் சென்று நாங்கள் கையெழுத்திட்டு வருகிறோம். நாங்கள் வசிக்கும் இடத்திலும் எங்கள் அடையாளத்தை மறைத்து எந்த தவறான நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

முதல் முறையாக நான் 'நாடற்றவன்', இந்தியன் அல்ல என்று என்னிடம் கூறிய போது, என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அது தெரிந்தவுடன், உடனே சட்டப்படி இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பித்தேன்' என்று ஆர். பகிசன் கூறினார்.

பகிசனின் குடும்பத்தினர் 1991-ம் ஆண்டு தமிழ்நாட்டுக்கு வந்துள்ளனர். அப்போது அவரது தாய் பகிசனை கர்ப்பத்தில் கொண்டிருந்தார். ராமேஸ்வரம் மண்டபம் முகாமில் இலங்கை அகதிகளாக தங்களை பதிவு செய்தனர். பின்னர் புதுக்கோட்டையில் உள்ள செந்தலை முகாமுக்கு மாற்றப்பட்டனர்.

"1991 மே மாதத்துக்குப் பிறகான காலத்தில் (ராஜீவ் படுகாலைக்கு பின்னர்) இலங்கை தமிழர்கள் மீதான கோபம் இருந்தால், சில முகாம்கள் மூடப்பட்டன. அப்போது நாங்கள் இருந்த முகாமும் மூடப்பட்டதால், 1992-ம் ஆண்டில் அங்கிருந்து பொது சமூகத்தில் வாழ அனுப்பப்பட்டோம். எனினும் தலைமை குடியேற்ற அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் தொடர்ந்து இருந்து வந்தோம். சென்னையில் முதலில் சிறிய காலம் வளசரவாக்கத்தில் இருந்தோம். பிறகு ராமாபுரத்துக்கு வந்த நாங்கள் அங்கேயே தான் இருந்து வருகிறோம்" என்கிறார் பகிசன்.

பகிசன் 2024-ம் ஆண்டு பாஸ்போர்ட் விண்ணப்பித்து பெற்றுள்ளார். அவருக்கு 2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இலங்கை நாட்டைச் சேர்ந்த பெண்ணுடன் திருமணம் நடந்தது. இலங்கையில் அவரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. "என் மனைவியை திருமணம் செய்வதற்காக மட்டுமே நான் இலங்கை சென்றுள்ளேன். அதற்கு முன் சென்றதில்லை." என்று அவர் கூறுகிறார்.

அவர் இந்திய குடியுரிமைக்காக விண்ணப்பித்த பிறகு, அவர் சட்டவிரோதமாக இந்திய பாஸ்போர்ட் வைத்திருந்தது உட்பட்ட காரணங்களுக்காக பாஸ்போர்ட் சட்டம் 1967-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு கடந்த ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டார்.

புழல் சிறையில் 15 நாட்கள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டிருந்தார். முதல் முறை மறுக்கப்பட்ட அவரது ஜாமீன் மனு, இரண்டாவது முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் அவரை திருச்சி சிறப்பு முகாமில் அடைக்க உள்ளதாக அரசு தரப்பில் அவரது ஜாமீன் மனு மீதான விசாரணையின் போது நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு தன்னை முகாமில் அடைத்தால் தனது பெற்றோர்களை பார்த்துக் கொள்ள முடியாது, தான் பணிக்கு செல்ல முடியாது என்று பகிசன் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் பி ஆர் ராமன் வழக்கு தொடர்ந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி எம். தண்டபாணி அக்டோபர் 8ம் தேதி வரை பகிசன் மீது அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளார்.

பகிசன் தற்போது தனது இந்திய ஆவணங்களை அதிகாரிகளிடம் சரண் செய்துள்ளார்.

இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தவர்களுக்கும், இந்தியாவில் பிறந்த அவர்களது குழந்தைகளுக்கும் இந்திய குடியுரிமை பெறுவது சாத்தியமில்லை.

1987-ம் ஆண்டு ஜூலை 1-ம் தேதிக்கு முன்பாக இந்தியாவில் பிறந்த அனைவருக்கும் கூடுதல் நிபந்தனைகள் இல்லாமல் இந்திய குடியுரிமை வழங்கப்படும். இந்திய குடியுரிமை சட்டம் 1955 திருத்தப்பட்ட பிறகு, அதாவது 1987-ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி அல்லது அதற்கு பிறகு ஒருவர் இந்தியாவில் பிறந்திருந்தாலும், அவரது பெற்றோரில் ஒருவராவது இந்தியராக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் இருவரும் சட்டவிரோத குடியேறிகளாக இருக்கக் கூடாது என்று விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் அடிப்படையிலேயே பகிசன் 'நாடற்றவர்' என்று அறிவிக்கப்பட்டுள்ளார்.

> "இந்தியாவில் அகதிகளுக்கான தனிச் சட்டம் இல்லாதது பாகுபாடுகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்துகிறது. 'அகதிகள்' யார் என்ற தெளிவான வரையறை கிடையாது. திபெத்திய அகதிகளுக்கு இமாச்சல பிரதேசத்தில் கிடைக்கும் வசதிகள், வெளிநாடு செல்லும் அனுமதி ஆகியவை இலங்கைத் தமிழர்களுக்கு கிடைப்பதில்லை."

அவர் தற்போது குடியுரிமை சட்டம் 1955, பிரிவு 6- ன் கீழ் *'Naturalization'* (இயல்புப்படுத்துதல்) அடிப்படையில் தனக்கு இந்திய குடியுரிமை வழங்க வேண்டும் என்று கோருகிறார். *Naturalization* அடிப்படையில் குடியுரிமை வழங்குவதற்கான நிபந்தனைகளை அவர் பூர்த்தி செய்கிறார்.

குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் முன், ஓராண்டு காலம் தொடர்ந்து இந்தியாவில் வசித்திருக்க வேண்டும். அதற்கு முன்பு 14 ஆண்டுகள் இந்தியாவில் வசித்திருக்க வேண்டும் சட்டம் கூறும் நிபந்தனைகளை அவர் பூர்த்தி செய்கிறார். குடியுரிமை சட்டத்தின் படி, இலங்கை அகதிகளுக்கு எந்த உரிமைகளும் கிடையாது. அரசின் கருணையை நம்பியே அவர்கள் இருக்க வேண்டியுள்ளது' என்று இந்த வழக்கில் ஈடுபட்டுள்ள வழக்கறிஞர் சந்தேஷ் சரவணன் கூறினார்.

தமிழ்நாட்டில் இந்தியாவை பூர்வீகமாக கொண்ட தமிழர்கள் உட்பட 58,357 இலங்கைத் தமிழர்கள் (19,300 குடும்பங்கள்) தமிழ்நாட்டில் உள்ள ஒரு சிறப்பு முகாம் உட்பட 105 முகாம்களில் இருக்கின்றனர். முகாம்களுக்கு வெளியே, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் பதிவு செய்த 13,400 குடும்பங்களில் 33,479 இலங்கைத் தமிழர்கள் வசிக்கின்றனர் என்று வெளிநாடு தமிழர்களின் நலன் மற்றும் மறுவாழ்வு ஆணையரகத்தின் தரவுகள் (2023) தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழர்களின் நலன் மற்றும் தீர்வுகளுக்காக 2021-ம் ஆண்டு தமிழ்நாடு அரசு உருவாக்கிய ஆலோசனைக் குழுவின் இடைக்கால அறிக்கை 2023-ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கை தமிழர்களுக்கான நீண்ட கால தீர்வுகள் குறித்து பேசிய அந்த குழுவின் அறிக்கை, பகிசனைப் போன்று 1987-க்கு பிறகு, பெற்றோர் இருவரும் இலங்கை நாட்டவராக இருக்கும் குடும்பங்களில் இந்தியாவில் பிறந்த 22,058 பேர் இருப்பதாக கூறுகிறது.

இவர்களை தவிர மேலும் 848 பேர், இலங்கைத் தமிழர் பெற்றோர்களுக்கு 1987-ம் ஆண்டு பிறகு பிறந்து, ஆனால் பிறந்த இடம் குறிப்பிடாமலும் உள்ளனர். இவை தமிழ்நாட்டில் 104 முகாம்களில் உள்ள 57,391 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்த தரவுகள் பெறப்பட்டன.

"இலங்கைத் தமிழர்களை இந்தியாவுக்குள் அனுமதிப்பது மத்திய உள்துறை அமைச்சகத்தின் ஒப்புதலுடன் நேரடி ஈடுபாட்டுடன் நடைபெற்றது. எனவே அவர்களை 'சட்டவிரோத குடியேறிகள்' என்று வகைப்படுத்துவதை மறு ஆய்வு செய்ய வேண்டும்" என்று ஆலோசனைக் குழு பரிந்துரைத்தது.

தமிழ்நாடு அரசின் இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக் குழுவின் உறுப்பினரான கோவி லெனின், பேசும் போது, "இலங்கை தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை பெறுவதில் ஆவணங்கள் இல்லாதது முக்கிய பிரச்னையாக உள்ளது. இதில் சிலர் இந்தியாவை பூர்வீகமாக கொண்ட மலையக தமிழர்களாக இருப்பார்கள். அவர்கள் முன்னோர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்திருப்பார்கள், ஆனால் அதற்கான ஆவணங்கள் இருந்திருக்காது.

இந்த ஆவணங்களைப் பெற்று தருவதில் தமிழ்நாடு அரசு உதவி வருகிறது. இந்திய குடியுரிமை கேட்டு நீதிமன்றத்தை நாடிய 13 பேருக்கு அவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் சுமார் 56 ஆயிரம் பேர் முகாம்களில் உள்ளனர். அவர்களில் 35 வயதுக்கு கீழ் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் இங்கேயே பிறந்து வளர்ந்தவர்களாக தான் இருப்பார்கள். முதலில் இவர்களுக்கு மட்டுமாவது இந்திய குடியுரிமை வழங்க மத்திய அரசு முடிவு செய்ய வேண்டும்" என்று கூறினார்.

திருச்சி முகாமில் இருந்த கே.நளினி இந்திய குடிமகளாக 2022-ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டார். இலங்கை அகதிகள் முகாம்களில் வசிப்பவர்களில் இந்திய குடியுரிமை பெற்ற முதல் நபர் அவர் ஆனார். அவர் 1986-ம் ஆண்டு இந்தியாவில் மண்டபம் முகாமில் பிறந்திருந்தார்.


1950-க்கும் 1987-க்கும் இடையில் இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்திய குடிமக்கள் ஆவர் என்று இந்திய குடியுரிமைச் சட்டம் கூறுவதால், அவரது குடியுரிமையை அங்கீகரிப்பதாக சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை 2022-ம் ஆண்டு தெரிவித்திருந்தது. நளினி போன்று 1987-க்கு முன்பு இந்தியாவில் பிறந்த 148 பேர் முகாம்களில் இருப்பதாக இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக் குழுவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

நளினி உட்பட பல இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை வழக்குகளை கையாண்டு வரும் மதுரையை சேர்ந்த வழக்கறிஞர் ரோமியோ ராய், "இந்தியாவில் அகதிகளுக்கான தனிச் சட்டம் இல்லாதது பாகுபாடுகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்துகிறது. 'அகதிகள்' யார் என்ற தெளிவான வரையறை கிடையாது. திபெத்திய அகதிகளுக்கு இமாச்சல பிரதேசத்தில் கிடைக்கும் வசதிகள், வெளிநாடு செல்லும் அனுமதி ஆகியவை இலங்கைத் தமிழர்களுக்கு கிடைப்பதில்லை.

இலங்கை தமிழர்களின் நிலையை விட ரோஹிங்க்யா மக்களின் நிலை மோசமாக உள்ளது. இந்திய குடியுரிமை வழங்குவது மத்திய உள்துறை அமைச்சகத்தின் பிரத்யேக அதிகாரங்களில் ஒன்று. ஒரு துறையில் சிறந்து விளங்கும், வேறு நாட்டை சேர்ந்தவருக்கு கூட அரசு நினைத்தால் குடியுரிமை வழங்க முடியும். எனவே அரசு நினைத்தால் எந்த நிபந்தனைகளையும் தளர்த்தி மனிதாபிமான அடிப்படையில் குடியுரிமை வழங்க முடியும்" என்கிறார்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நிலாந்தன்


# விஜய், கமல், போராளிகள் தேர்தல்?

நடிகர் விஜய் தொடங்கியிருக்கும் கட்சி தொடர்பாக அண்மையில் நடிகர் கமலஹாசன் ஒரு கருத்துத் தெரிவித்திருந்தார். கூட்டத்துக்கு வருபவர்கள் எல்லாரும் வாக்குப் போட மாட்டார்கள் என்ற பொருள்பட அக்கருத்து அமைந்திருந்தது. அது விஜய்க்கு மட்டுமல்ல தனக்கும் பொருந்தும் என்று கமலஹாசன் கூறியிருக்கிறார். சமூகத்தில் வெவ்வேறு துறைகளின்மூலம் தாங்கள் பெற்ற பிரபல்யத்தை, செல்வாக்கை தேர்தலில் முதலீடு செய்வது என்பது தேர்தல்மைய அரசியலில் ஒரு பிரதான போக்கு. ஆனால் அதற்காக ரசிகர்கள் எல்லாருமே வாக்களிப்பார்கள் என்று இல்லை. மாணவர்கள் எல்லாருமே ஆசிரியருக்கு வாக்கு போடுவார்கள் என்று இல்லை. சமூகத்துக்காக தியாகம் செய்தவர்கள் எல்லாரும் தேர்தலில் வெல்வார்கள் என்று இல்லை.

உதாரணமாக, தமிழ்த் தேசிய அரசியலில் ஆசிரியர்கள் வரதராஜன், ஐங்கரநேசன், அருந்தவபாலன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். குறிப்பாக வரதராஜன் தேர்தல் கேட்ட பொழுது மற்றொரு ஆசிரியர் என்னிடம் சொன்னார் "அவருடைய மாணவர்கள் வாக்களித்தாலே அவர் நாடாளுமன்ற உறுப்பினராக வந்து விடுவார். ஆனால் மாணவர்களாக இருப்பது வேறு வாக்காளர்களாக இருப்பது வேறு. எல்லா மாணவர்களும் ஆசிரியருக்கு வாக்களிப்பார்கள் என்று இல்லை" என்று.

அப்படித்தான் இந்தியாவில் மணிப்பூரில் இரோம் ஷர்மிலா என்ற பெண் செயல்பாட்டாளர் அங்கு அமுலில் இருந்த சிறப்பு ஆயுதப்படைச் சட்டத்தை திரும்பப் பெறக் கோரி 15 ஆண்டுகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். அவரை மணிப்பூரின் "இரும்புப் பெண்மணி" என்று அழைப்பார்கள். பின்னர் அவர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு 2017ஆம் ஆண்டு மணிப்பூர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் எந்த மக்களுக்காக அவர் 15 ஆண்டுகள் உண்ணாமல் போராடினாரோ, அதே மக்கள் அவரைக் குரூரமாக நிராகரித்தார்கள். அவருக்கு 100 வாக்குகள்கூட கிடைக்கவில்லை. கட்டுப்பணமும் இல்லை.

தமிழ் தேசியப் பரப்பில், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட பலரும் பின்னர் தேர்தல் கேட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருகிறார்கள். எனினும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நீண்ட காலம் ஈடுபட்ட அமைப்பாகிய விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யாருமே கடந்த 16 ஆண்டுகளிலும் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய வெற்றிகளை பெற்றதில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து புனர்வாழ்வு பெற்றபின் கட்சிகளைத் தொடங்கியவர்களும் வெற்றி பெறவில்லை. ஏனைய கட்சிகளில் இணைந்து போட்டியிட்டவர்களும் வெற்றிபெறவில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், ஒரு பெண், போரில் காலை இழந்தவர், வன்னியில் போட்டியிட்டார். அவரை வெற்றிபெற வைப்பதற்காக அவருடைய நண்பர்கள் ஆயிரக்கணக்கான வீடுகளுக்குப் போய் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் அவருக்கு கிடைத்தது இரண்டு ஆயிரத்துச் சொச்சம் வாக்குகள்தான்.





> மிக உயர்வான தகமைகள் என்று கருதப்படும் தியாகம், அர்ப்பணிப்பு, நேர்மை போன்றவற்றைத் தேர்தல் மொழியில் மொழிபெயர்க்கத் தெரியாத போராளிகள் தொடர்ந்து தோற்கடிக்கப்படுகிறார்கள். அரசியலில் அர்ப்பணிக்கத் தயாராக இருப்பவர்கள் தொடர்ந்து பின் தள்ளப்படுவார்கள். மாறாக அரசியலை ஒரு பிழைப்பாக முன்னெடுப்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

தமிழ்த் தேசியப் பரப்பில் ஏனைய கட்சிகள் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எல்லாப் போராட்டங்களிலும் பொன் மாஸ்டர் காணப்படுவார். அவர் முன்பு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தவர். அவர் உள்ளூராட்சி சபைத் தேர்தல் கேட்டிருக்கிறார். ஆனால் உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக வரத் தேவையான வாக்குகளைக் கூட மக்கள் அவருக்குக் கொடுக்கவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தன்னை கொள்கையில் விட்டுக் கொடுப்பற்ற ஒரு கட்சியாகக் கூறிக் கொள்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் லட்சியத்தை விட்டுக்கொடுப்பின்றி பின்பற்றும் ஒரு கட்சியாகவும் அது தன்னைக் காட்டிக் கொள்கிறது. அப்படியென்றால் ஒவ்வொரு மாவீரர் நாளின் போதும் துயிலுமில்லங்களில் சிந்தப்படும் கண்ணீர் யாவும் அந்தக் கட்சிக்குத்தானே வாக்குகளாகத் திரள வேண்டும்? ஏன் அப்படி நடக்கவில்லை?

முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்கத்தவர்களால் ஏன் தேர்தல்களில் பெரு வெற்றி பெற முடியவில்லை? அவர்களுக்கு தேர்தல் மொழியில் பேசத் தெரியவில்லையா? அல்லது அவர்களைச் சமூகம் போர்க்களத்துக்கு மட்டும் உரியவர்களாகப் பார்க்கின்றதா? தேர்தல் களத்துக்கு உரியவர்கள் அல்ல என்று கருதுகின்றதா?

இதே கேள்விகளைச் சிங்கள வாக்காளர்களை நோக்கியும் கேட்கலாம். ஏனென்றால் சில ஆண்டுகளுக்கு முன்பு தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களின் அடித்தளமாக இருந்தவர்கள் என்று கருதப்படுகின்ற அமைப்புக்களில் ஒரு பகுதி ஒன்றாகத் திரண்டு குடைச் சின்னத்தின் கீழ் போட்டியிட்டன. ஆனால் அவர்களுக்கு அற்பசொற்ப வாக்குகள்தான் கிடைத்தன. நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தம் 11 ஆயிரம் வாக்குகள் ஜனாதிபதி தேர்தலில் கிட்டத்தட்ட 30,000 வாக்குகள். அதேசமயம் போராட்டங்களின் விளைவுகளை தேர்தல் மொழியில் கவர்ச்சியாக மொழிபெயர்த்த ஜேவிபி மூன்றில் இரண்டு பெரும்பான்மையப் பெற்று இப்பொழுது நாட்டை ஆட்சி செய்கின்றது.

அப்படியென்றால் சிங்கள மக்கள் தங்களுக்காக வீதியில் இறங்கிப் போராடியவர்களை அல்லது அந்தப் போராட்டங்களைப் பின்னிருந்து ஊக்குவித்தவர்களை ஏன் தோற்கடித்தார்கள் ?

போராளிகள் வேறு அரசியல்வாதிகள் வேறு என்று மக்கள் கருதுகின்றார்களா? போராளிகள் அரசியல்வாதிகளாக மாறுவதை சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லையா ? அல்லது போராளிகளுக்கு தங்கள் போராட்டத்தை தேர்தல் மொழியில் மொழிபெயர்க்கத் தெரியவில்லையா? அல்லது உண்மையான அர்ப்பணிப்புக்கும் நேர்மைக்கும் விசுவாசத்திற்கும் தியாகத்துக்கும் தேர்தல் அகராதியில் இடமில்லையா ?

ஆனால் ஜேவிபியும் முன்பு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டதையும் குரூரமாக நசுக்கப்பட்டதையும் சுட்டிக்காட்ட வேண்டும். கடந்த அரை நூற்றாண்டு காலப்பகுதிக்குள் அவர்கள் தேர்தல் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்து விட்டதனால்தான் இம்முறை ஆளுங்கட்சியாக வர முடிந்திருக்கின்றது. ஜேவிபி தன்னை எம்பிபியாக உருமாற்றிக் கொண்டது. அதன் விளைவாகத்தான் இப்பொழுது நாட்டை ஆழ்கின்றது.

ஆயுதப் போராட்ட இயக்கங்களின் தியாகங்கள்,இரோம் சர்மிளா போன்றவர்களின் தியாகம் என்பவற்றோடு நடிகர் விஜயின் செல்வாக்கை ஒப்பிட முடியாது. ஆனால் இங்கு இந்த கட்டுரையின் குவிமையம் என்னவென்றால் தேர்தல் அரசியலில் வெற்றி பெறுவதற்கான தகமைகள் எவை எவை என்ற கேள்விதான். மிக உயர்வான தகமைகள் என்று கருதப்படும் தியாகம், அர்ப்பணிப்பு,நேர்மை போன்றவற்றைத் தேர்தல் மொழியில் மொழிபெயர்க்கத் தெரியாத போராளிகள் தொடர்ந்து தோற்கடிக்கப்படுகிறார்கள். அரசியலில் அர்ப்பணிக்கத் தயாராக இருப்பவர்கள் தொடர்ந்து பின் தள்ளப்படுவார்கள். மாறாக அரசியலை ஒரு பிழைப்பாக முன்னெடுப்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

தமிழகத்தில் நல்லகண்ணு என்று ஒர் இடதுசாரி இருக்கிறார். நேர்மையானவர், கண்ணியமானவர், ஒரு சன்னியாசியைப் போன்றவர், அர்ப்பணிப்பு மிக்கவர். ஆனால் அவர் தேர்தலில் வென்றதில்லை. இது தேர்தல் ஜனநாயகத்தில் உள்ள அடிப்படைப் பலவீனம்.

வாக்காளர்களின் நாடித்துடிப்பை நன்கு அறிந்தவர்கள்,தேர்தல் அரசியலின் கள்ளத்தனங்களை விளங்கிக் கொண்டவர்கள் வெற்றி பெறுகிறார்கள். இங்கு வெற்றியைத் தீர்மானிப்பது வாக்காளர்களின் அறியாமையா? அல்லது அறிவா? அல்லது விழிப்பற்ற பொதுப் புத்தியா ?அல்லது குறிப்பிட்ட வேட்பாளரின் அதிர்ஷ்டமா? ரஷ்யாவில் பிறந்து அமெரிக்காவில் குடியேறிய,அரசியல் செயல்பாட்டாளராகிய எம்மா கோல்ட்மன் கூறுவதுபோல, "வாக்களிப்பு எதையாவது மாற்றுமாக இருந்தால், அவர்கள் தேர்தலைச் சட்டவிரோதமாக்கி விடுவார்கள்" என்பதுதான் சரியா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவில் அநுரவின் உரை ஊருக்கு உபதேசமா? உண்மையான மனமாற்றமா?

- கந்தையா அருந்தவபாலன்



ஐக்கிய நாடுகள் சபையின் எண்பதாவது ஆண்டின் பொதுச்சபை அமர்வில் இலங்கை அரச தலைவர் என்ற வகையில் கடந்த 25 ஆந்திகதி அநுர குமார திசநாயக்க உரையாற்றியிருந்தார். அவரது உரை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் பல்வேறு தரப்பினராலும் வரவேற்கப்பட்டிருந்தாலும் அவரது சொந்த நாட்டின் தேசிய இனமான தமிழ் மக்களால் அதிகம் வரவேற்கப்படவில்லை. அது தொடர்பாக முகநூல் நண்பர் ஒருவர் இட்ட பதிவொன்றின் தலைப்பு 'ஊருக்கு உபதேசம்' இன்னொரு நண்பர், அவர் எழுத்தாளரும்கூட சென்ற வெள்ளிக்கிழமை ஈழநாடு முதற் பக்கத்தில் அருகருகில் படத்துடன் கூட வந்த செய்தித்துண்டத்தை போட்டு நல்லாத்தானிருக்கு என்று பதிவிட்டிருந்தார். அந்தச் செய்திகள் ஒன்று தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதிகோரி யாழில் உண்ணாவிரதப் போராட்டம்.மற்றது பலஸ்தீனத்தைத் தனிநாடாக ஐ.நாவில் அங்கீகரித்தார் அனுர. இவை அனுரவின் அவ்வுரை தொடர்பான பெரும்பாலான தமிழ்மக்களின் உணர்வுகளுக்கான சில உதாரணங்கள். சர்வதேச அரங்கொன்றில் அநுர முன்வைத்த உரையின் உள்ளடக்கம் யாவும் முறபோக்கானவை என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இருக்கமுடியாது. ஆனால் அவரது இக்கருத்துகளுக்கும் அவரது நாட்டின் குடிமக்களான, அவர் வார்த்தையில் இலங்கையரான, தமிழ் மக்கள் தொடர்பான அவரது கடந்தகால மற்றும் நிகழ்கால அணுகுமுறைகளுக்கும் இடையில் ஒத்திசைவு காணப்படாமையே தமிழ் மக்களின் மேற்குறித்த உணர்வு நிலைக்கான காரணமாகும். அவரது அந்தக் கருத்துக்கள் தமிழ் மக்கள் நினைப்பது போல ஊருக்கு உபதேசமா? அல்லது அவரது உண்மையான மனமாற்றமா?

ஐ.நா சபையில் ஜனாதிபதியின் உரையின் உள்ளடக்கம் பிரதானமாக ஊழல் ஒழிப்பு, போதைப் பொருள் ஒழிப்பு, வறுமையகற்றல், கல்விக்கான உரிமை, யுத்தம், சமாதானம், நீதி, சமத்துவம் என்பவற்றை முதன்மைப் படுத்தியதுடன் பலஸ்தீன மக்களின் அரசுக்கான இறைமையையும் அங்கீகரித்திருந்தன. இக்கருத்துகளில் ஊழல் ஒழிப்பு, போதைப்பொருள் ஒழிப்பு போன்ற அவரது கருத்துகளை மட்டுமன்றி முன்னெடுக்கும் செயற்பாடுகளையும் தமிழ் மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர். ஆனால் யுத்தம், சமாதானம், மதவாதம், இனவாதம், உரிமைகள் என்பவற்றுடன் பலஸ்தீன மக்களின் இறைமையை ஏற்கும் அதேவேளை தமிழ் மக்களின் இறைமையை மறுக்கும் விடயங்களில் அவரது சொல்லுக்கும் செயல்களுக்குமிடையில் தமிழ் மக்களுடன் அனுர முரண்பட்டு நிற்பதைக் காணமுடியும். அதுமட்டுமன்றி பாராளுமன்றப் பன்முகத்தன்மை, சமவாய்ப்பு என்ற வார்த்தைகளினூடாக இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஏதுமில்லை என மறைமுகமாகச் சொல்லிச் சென்றுள்ளாரோ என ஐயுறவேண்டியுள்ளது.

"உலகைப் பாதிக்கும் மோதலுக்கு மதவாதம் மற்றும் இனவாதம் முக்கிய காரணிகளாக அமைகின்றன."

" இவ்வளவு முற்போக்கான உலகில் கூட இந்த இனவெறி மற்றும் இனவாதக் கருத்துகள் சாம்பலுக்கு அடியில் உள்ள தீப்பொறிகள் போல இருப்பது நகைப்புக்கும் ஆச்சரியத்துக்கும் உரிய விடயங்களாகும்"

அனுர உலகுக்குக் கூறிய மேற்காட்டிய கருத்துகளையும் அவரும் அவரது தோழர்களும் கடந்தகாலத்தில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளையும் ஒரு கணம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக சகல பௌத்த சிங்களப் பேரினவாதக் கட்சிகளும் செயற்பட்டு வந்தாலும் அவற்றுள் மிகத்தீவிரமாகச் செயற்பட்டு முதலில் இருப்பது ஜே.வி.பி. ஆகும். அக்கட்சியின் தற்போதைய தலைவரான அனுர தமிழ் மக்களுக்கெதிரான முக்கிய செயற்பாட்டாளராக இருந்து வந்தவர். மாகாணசபைகள் முறைமைகளை எதிர்ப்பதில் தொடங்கிய அவர்களது தமிழ் மக்களுக்கு எதிரான தீவிரச் செயற்பாடுகள் பின்னர் யுத்த ஆதரவு, யுத்தத்திற்கு ஆளணிகளைத் திரட்டுதல், இடைக்கால அதிகாரசபையைக் குழப்புதல், யுத்த நிறுத்தத்தை எதிர்த்தல், வடக்கு கிழக்கைப் பிரித்தல் போன்ற பல்வேறு பௌத்த சிங்களப் பெருமைகளைக் கொண்டவை. அச்செயற்பாடுகளின் முக்கிய பங்காளன் இன்றைய ஜனாதிபதி அனுர. முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக் கணக்கான மக்கள் அவலப்பட்டபோது உள்ளூர மகிழ்ந்த அக்கட்சியின் தோழர்கள் இப்போது காசா மக்களுக்காக கண்ணீர் வடிப்பதை எவ்வாறு பார்ப்பது? தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் யுத்தத்தினபோது தலையிட முனைந்த ஐ.நாவுக்கெதிராக விமல் வீரவன்ச தலைமையில் போராட்டம் செய்த அனுர இன்று அச்சபையில் நின்று சர்வதேச சமூகத்தை நோக்கி பார்வையாளராக இதுவரை இருந்தது போதும் என்று குரலெழுப்புவதை எப்படிப்பார்ப்பது?

"ஆயுதங்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக மனித நாகரீகத்தின் மதிப்புகள் மூலம் தீர்க்கும் திறனுக்குள் நாங்கள் பிரவேசிக்கவேண்டும். மில்லியன் கணக்காக பசியால் குழந்தைகள் இறக்கும் உலகில் நாம் மில்லியன் கணக்கான பணத்தை ஆயுதங்களுக்காகச் செலவிடுகின்றோம்." எவ்வளவு பொருள் நிறைந்த யதார்த்தமானவை அவரது வார்த்தைகள். ஆனால் இதை அனுர கூறுவதைத்தான் தமிழர்களால் ஜீரணிக்க முடியாமல் உள்ளது. ஒரு ஆயுதப் போராட்டக் குழுவின் இன்றைய தலைவர். இலங்கை அரசுக்கெதிராக இரண்டு தடவைகள் ஆயுதப் போராட்டத்தை செய்து பல அரச சொத்துக்களையும் உயிர்களையும் காவுகொண்டவர்கள். அதற்கு மேலாக தமிழர்களுக்கெதிரான அரச பயங்கரவாதத்தின் பிரதான பங்காளிகள். தற்போது தங்கள் கடந்தகாலப் பாதையை தாங்களே விமர்சிக்கிறார்களா? அல்லது அரச அதிகாரத்தை ஆயுத பலத்தால் பெற

> **கடந்த ஓராண்டு ஆட்சியில் தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் கெடுபிடிகள் குறைந்தமையை அநுரவின் மனமாற்றத்துக்கான அறிகுறியாக தமிழ் மக்கள் ஏன் கருதக்கூடாது? இவை யாவும் நியாயமான கேள்விகள்தான். இந்தக் கேளவிகளுக்கான விடைகளை அடுத்துவரும் ஆண்டுகளில் கிடைத்துவிடும்.**

முயற்சித்து தோல்வியில் முடிய ஜனநாயக வழிமுறைமூலம் அவ்வதிகாரத்தைப் பெற்றதால் ஏற்பட்ட மனமாற்றம் என்று இதனைக் கொள்ளலாமா? அப்படியானால் இவ்வாண்டுக்கான அரச வரவு செலவுத் திட்டத்தில் மட்டுமன்றி அடுத்தாண்டுக்கான அரச வரவு செலவுத்திட்டத்திலும் பாதுகாப்பு அமைச்சுக்கு ஏன் அதிகளவு நிதியை அவர் ஒதுக்கவேண்டும்? எடுத்துக்காட்டாக 2026 ஆண்டுக்கான அரச வரவு செலவுத் திட்டத்தில் 4554 பில்லியன் ரூபா மொத்த செலவில் பாதுகாப்பு அமைச்சுக்கு 445 பில்லியன் ஒதுக்கப்படும்போது கல்விக்கு 300 பில்லியன் ரூபாவை மட்டுமே நிதியமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார ஒதுக்கியுள்ளதைக் காணமுடிகிறது. இது அவரின் மாற்றத்தைப் பிரதிபலிக்கவில்லையே.

இவை எல்லாவற்றுக்கும் மேலாகக் கவனத்தில் கொள்ளவேண்டியது பலஸ்தீன நாட்டுக்கான இலங்கை சார்பான அனுரவின் அங்கீகாரம். நிச்சயமாக இலங்கையின் இந்த நிலைப்பாட்டை வரவேற்கவேண்டும். இஸ்ரேலின் இந்த மிகக் கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான இனப்படுகொலைகளை இந்த உலகிலுள்ள மனிதத்துவமுடைய எவனும் ஏற்றுக் கொள்ளமாட்டான். இஸ்ரேலின் இவ்வாறான இரத்தக்கறை கொண்ட வரலாற்றின் பங்காளிகளே இன்று அந்நாட்டுக்கெதிராகத் திரும்பியுள்ள நிலையில் இலங்கை ஜனாதிபதி பலஸ்தீனத்தை அங்கீகரிப்பதில் ஆச்சரியம் எதுவும் இருக்கமுடியாது. ஆனால் இங்கெழும் கேள்வி என்னவெனில் பலஸ்தீன மக்களைப்போலவே தேச இறைமையைக் கொண்ட ஒரு இனமாக தனது நாட்டில் இருக்கும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அநுரவும் அவர்களது தோழர்களும் ஏன் ஏற்க மறுக்கிறார்கள் என்பதாகும். ஏற்க மறுப்பது மட்டுமன்றி பலஸ்தீன மக்களை இஸ்ரேல் எவ்வகையில் ஒடுக்க நினைக்கிறதோ அதே செயலைத்தானே இலங்கையும் இதுவரை செய்து கொண்டிருக்கிறது. பலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிக்கும் அனுர இந்த நாட்டுக்குள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று கூட்டாட்சி முறையொன்றை உருவாக்கப் பின்னடிப்பது ஏன்? குறைந்தது அரசியலமைப்பிலுள்ள அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குவதற்கான எந்தவொரு விருப்பத்தைக்கூட இதுவரை அவர் தெரிவிக்கவில்லையே. இவ்வாறு அவரது நாட்டில் நிலைமை இருக்கையில் ஐ.நாவில் அவர் கூறிய கருத்துகளையிட்டு தமிழ் மக்கள் மட்டுமன்றி சுயமாகச் சிந்திக்கும் எவரும் அவரது அந்தக்கருத்துக்களை ஊருக்கு உபதேசம் எனக் கருதுவதில் என்ன தவறிருக்க முடியும்?


அனுரவின் கடந்த காலத்தை வைத்து இவ்வாறு அவரை மதிப்பிடுவது சரியாக இருக்குமா? ஒருவரின் கடந்த காலத்தைக் கொண்டு எதிர்காலத்தை மதிப்பிடுவது சரியானதா? மனிதன் மாறாவிட்டாலும் அவனது கொள்கைகளும் நடத்தைகளும் மாறும் என்பதை சமூகத்தில் உள்ளவர்களிடம் மட்டுமன்றி அரசியல் தலைவர்களிடமும் இருந்தமை வரலாற்றில் நிறையவே உள்ளனவே. ஜே.வி.பி கடந்த காலத்தில் கொண்டிருந்த சிந்தாந்த நிலைப்பாடுகள் பலவற்றிலிருந்து இப்போது தன்னை மாற்றிக் கொண்டுள்ளதே. தேர்தல் காலத்தில் அது மக்களுக்கு உறுதியளித்த வாக்குறுதிகளை நாட்டின் யதார்த்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மாற்றிக்கொண்டுள்ளதே. அதேபோல தமிழ் மக்கள் தொடர்பான அதன் முன்னைய நிலைப்பாட்டையும் அது மாற்றிக் கொண்டு விட்டதாக ஏன் கருதமுடியாது? கடந்த ஓராண்டு ஆட்சியில் தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் கெடுபிடிகள் குறைந்தமையை அநுரவின் மனமாற்றத்துக்கான அறிகுறியாக தமிழ் மக்கள் ஏன் கருதக்கூடாது? இவை யாவும் நியாயமான கேள்விகள்தான். இந்தக் கேளவிகளுக்கான விடைகளை அடுத்துவரும் ஆண்டுகளில் கிடைத்துவிடும். அப்போது அவரின் உரை ஊருக்கான உபதேசமா அல்லது உண்மையான மனமாற்றமா என்பதைஅனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

விடைகள் எப்படியும் இருக்கலாம். ஆனால் பொருத்தமான விடைகள் கிடைக்கும்வரை தமது அரசியல் உரிமைகளுக்கான தமிழ் மக்களின் போராட்டம் பலத்துடன் இருக்கவேண்டியது அவசியம். ஏனெனில் "நான் இப்போது மாறிவிட்டேன். மாமிசம் தின்பதில்லை." என்று கூறி மனிதனை ஏமாற்றிய புலி பற்றிய பஞ்சதந்திரக் கதையை நாம் எல்லோரும் சிறுவயதில் படித்திருக்கிறோமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் இழந்த பகுதிகளை மீட்குமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா





## ரஷ்யா ‘காகிதப் புலி’ என ட்ரம்ப் கண்டனம்!

**ரஷ்யாவிடம் இழந்த அனைத்துப் பகுதிகளையும் மீட்கும் வலிமை உக்ரைனுக்கு இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளமை, இப்போர் குறித்த அவரது நிலைப்பாட்டில் ஒரு பெரிய மாற்றத்தைக் குறிக்கிறது. அலாஸ்காவில் புட்டினுக்கு செங்கம்பள வரவேற்புடன், மிக நெருக்கமாக ட்ரம்ப் சந்தித்தன் மூலம், சமாதான அறிகுறிகள் தென்பட்டன. ஆனால் தற்போது ஐரோப்பிய வான் எல்லைகளில் பறக்கும் ரஷ்ய விமானங்களை சுட்டு வீழ்த்த ட்ரம்ப் அறிவித்தது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது)**

இந்தியா-பாகிஸ்தான் மோதல் உட்பட ஏழு போர்களைத் தீர்த்து வைத்ததை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மிகப் பெருமையாக பேசி வருகிறார். கடந்த ஏழு மாதங்களில், உலகின் ஏழு முடிவடையாத போர்களை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளேன் என்று ட்ரம்ப் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்.

ஐக்கிய நாட்டுச் சபையின் 80வது பொதுக் கூட்டத்தில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உக்ரேனிய அதிபர் விலொடிமிர் ஜெலன்ஸ்கியை செப்டம்பர் 23இல் சந்தித்தார். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவோடு போரில் இழந்த பகுதிகள் முழுவதையும் உக்ரேன் மீட்டெடுக்க முடியும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளமை, ரஷ்யாவுடனான போர் குறித்த அவரது நிலைப்பாட்டில் ஒரு பெரிய மாற்றத்தைக் குறிக்கிறது.


ரஷ்யாவிடம் இழந்த அனைத்துப் பகுதிகளையும் மீட்கும் வலிமை உக்ரைனுக்கு இருப்பதாக கூறியமை, முன்னர் உக்ரைன் சில சலுகைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் விடுத்த அழைப்பிலிருந்து விலகி, தனது நிலைப்பாட்டை மாற்றியதைக் குறிக்கிறது.



ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோவின் ஆதரவுடன் உக்ரைன் தனது முன்னைய எல்லைகளை போராடி வெல்ல முடியும் என்று ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் பதிவிட்டுள்ளார். உண்மையிலே ஒரு வாரத்திற்குள் வென்றிருக்க வேண்டிய போரில், ரஷ்யா மூன்றரை ஆண்டுகளாக குறிக்கோள் இல்லாமல் சண்டையிடுகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இது ரஷ்யாவை ஒரு “காகிதப் புலி” போல தோற்றமளிக்கச் செய்துள்ளது என்றும் அவர் காட்டமாக சாடியுள்ளார்.

இதேவேளை உக்ரைனின் எதிர்த்துப் போராடும் திறன், தங்கள் நிலத்தை மீட்டெடுக்கட்டும் என்றும், அமெரிக்கா தொடர்ந்து நேட்டோ மூலம் ஆயுதங்களை வழங்கும் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும் மாஸ்கோ மீதான பொருளாதார அழுத்தம் அதிகரித்து வருவதாகவும் ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார். மாஸ்கோ மற்றும் ரஷ்யா முழுவதும் உள்ள அனைத்து பெரிய நகரங்கள், மாவட்டங்களில் வாழும் மக்கள், இப்போரில் உண்மையில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளாமல் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.




ரஷ்யா உக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் இல்லை என்றால் அந்த நாட்டின் மீது மிக வலுவான முறையில் அமெரிக்கா வரி விதிக்கும் என்று எச்சரிக்கை விடுத்தார். இந்த நடவடிக்கையின் மூலம் போரில் இலட்சக்கணக்கான உயிர்களின் ரத்தம் சிந்தப்படுவது தடுத்து நிறுத்தப்படும் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா - உக்ரேன் போர் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்றால் அனைத்து ஐரோப்பிய நாடுகளும் ரஷ்யா மீதான பொருளாதார தடை எடுக்க வேண்டிய சூழல் ஏற்படும். இல்லாவிடின் அமெரிக்கா நிச்சயம் தலையிடும் என்று கருத்து தெரிவித்தார்.

### சீனாவும் இந்தியாவும் காரணம்:

உக்ரைன் - ரஷ்யா இடையே நடந்து வரும் மோதலுக்கு சீனாவும் இந்தியாவும் காரணம் என்றும் ட்ரம்ப் குற்றம்சாட்டி உள்ளார். ரஷ்யாவின் எண்ணெயைத்



தொடர்ந்து வாங்குவதன் மூலம் சீனாவும் இந்தியாவும் நடந்து கொண்டிருக்கும் போருக்கு முதன்மையான நிதியுதவி அளிப்பவர்களாக இருப்பதாக ட்ரம்ப் குற்றம் சாட்டினார். ஆனால் நோட்டாவின் ராணுவ கூட்டமைப்பில் உள்ள நாடுகள் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருளை வாங்குவதை இதுவரை குறைக்கவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டவில்லை.

ரஷ்யாவிடமிருந்து இந்தியா கச்சா எண்ணையை இறக்குமதி செய்து வந்ததன் காரணமாக கடந்த ஜூலை மாதம் இந்திய பொருட்களுக்கு 25 சதவீத வரியை அமெரிக்க விதித்தது. தற்பொழுது அதை 50 சதவீதமாக உயர்த்தி உள்ளது .இந்த நடைமுறை கடந்த ஆகஸ்ட் 27ஆம் தேதியிலிருந்து அமலில் இருந்து வருகிறது.

### ஏழு போர்களை தீர்த்த ட்ரம்ப்?

இந்தியா-பாகிஸ்தான் மோதல் உட்பட ஏழு போர்களைத் தீர்த்து வைத்ததை அமெரிக்க ட்ரம்ப் வெளிப்படையாக கூறி வருகிறார். கடந்த ஏழு மாதங்களில், ஏழு முடிவடையாத போர்களை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளேன் என்று ட்ரம்ப் கூறி உள்ளார்.

உலகில் பல முடிவடையாத போர் என்று கூறப்பட்ட நிலையில், சில போர்கள் 31 ஆண்டுகள் நீடித்தன, ஒன்று 36 ஆண்டுகள் நீடித்தது. ஆனால் நான் முடிவுக்குக் கொண்டு வந்தேன். இந்த போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

கம்போடியா மற்றும் தாய்லாந்து, சேர்பியா, காங்கோ மற்றும் ருவாண்டா, பாகிஸ்தான் மற்றும் இந்தியா, இஸ்ரேல் மற்றும் ஈரான், எகிப்து மற்றும் எத்தியோப்பியா, ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜான் ஆகிய நாடுகளை அவர் தனது கண்காணிப்பின் கீழ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் போரை நிறுத்தியதாக கூறியுள்ளார்.

இந்த போர் நிறுத்த நடவடிக்கைகளை ஐ. நா செய்யவில்லை . இது தொடர்பாக ஐ. நா. வெறும் கடிதத்தை மட்டுமே எழுதி இருந்தது. நான் நிறுத்திய ஏழு போர்களை போல, ஜனாதிபதி புட்டினுடனான எனது உறவின் காரணமாக இது மிகவும் எளிதானதாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் அது மிகவும் கடினமாக தற்போது உள்ளது.

### ரஷ்ய விமானங்களை சுட உத்தரவு:

நேட்டோ கூட்டமைப்பு (வடஅட்லான்டிக் ஒப்பந்த அமைப்பு) நாடுகளின் ஆகாயவெளியின் எல்லைகளை மீறும் ரஷ்யாவின் விமானங்களைச் சுட்டு வீழ்த்துமாறும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். மேலும் நேட்டோ வான் பாதுகாப்பு ஆயுதங்களை வைத்து உக்ரைன் வெற்றிக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவு வழங்குவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அலாஸ்காவில் புட்டினை ட்ரம்ப் சந்தித்த பிறகு, உக்ரைன் போரில் சமாதான தீர்வு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் தொடர்ந்து பதற்றம் சூழ்ந்த நிலையில் ரஷ்ய அதிபர் புட்டின் பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்ற நம்பத்தகுந்த பங்காளிதானா என்பதில் எந்த முடிவும் எடுக்க முடியாத நிலையில் இருப்பதாக அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபரின் இந்த பெரிய மாற்றம் காரணமாக உக்ரைன் போரில் கடும் பின்னடைவை ரஷ்யா சந்திக்கும் என உக்ரேனிய அதிபர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார். இதற்கு முன்பாக, அமைதி ஏற்பட வேண்டுமென்றால், உக்ரேன் அதன் பகுதிகளை இழக்கத் தயாராக வேண்டும் என ட்ரம்ப் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

### வான்பரப்பில் ரஷ்யா அத்துமீறல்

ஐரோப்பிய வான்பரப்பில் ரஷ்யா அத்துமீறல் என நேட்டோ அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் ஐரோப்பிய நாடுகளில் பதற்றம் நிலவுகிறது. எஸ்டோனிய வான்பரப்பில் மூன்று ரஷ்ய போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்ததாகவும், அதை நேட்டோ படைகள் இடைமறித்தாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கெனவே ஜோர்ஜியாவில் ரஷ்ய ட்ரோன்கள் நுழைந்திருந்தது. தற்போது எஸ்டோனியாவுக்குள் ரஷ்ய போர் விமான நுழைந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த வாரம் போலந்தின் எல்லையில் இரண்டு ரஷ்ய போர் விமானங்கள், பெட்ரோபால்டிக் நிறுவனத்திற்குச் சொந்தமான பால்டிக் கடல் எண்ணெய் தளத்தின் மீது தாழ்வான உயரத்தில் பறந்ததாக கூறப்படுகிறது.

பால்டிக் நாடான எஸ்டோனியா, ரஷ்யாவின் பக்கத்து நாடாகும். உக்ரைனக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும் கூட, ஏன் இந்த நாட்டின் எல்லைக்குள் ரஷ்ய



ராணுவ விமானங்கள் நுழைந்தன என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

எனவேதான் போலாந்து, எஸ்டோனியா உள்ளிட்ட நாடுகள் மூலம் நேட்டோ வான் பாதுகாப்புக்கு தயாராகி வருகிறது. ரஷ்ய விமானங்களுக்கு எதிராக நேட்டோ எடுத்த நடவடிக்கையை அமைப்பின் பொதுச்செயலாளர் மார்க் ரூட்டே பாராட்டியிருக்கிறார்.

மேலும் நேட்டோ கூட்டமைப்பு நாடுகளின் ஆகாய வெளியின் எல்லைகளை மீறும் ரஷ்யாவின் விமானங்களைச் சுட்டு வீழ்த்துமாறும் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். இது ரஷ்யாவிற்கு எதிரான கடும் போக்கை ட்ரம்ப் எடுத்துள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறது. உக்ரைன் மீதான புதிய அமெரிக்க ஆதரவு போரின் நிலையை இலகுவாக மாற்றுமா என்பது கேள்விக்குறியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமைக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும்”

கொழும்பு, செப். 28

சுங்கத்தில் இருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கு அமைய இதுவரையில் எந்தவித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. நாட்டுக்கு தரமற்ற மருந்துகளும் ஆயுதங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமைக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கோப் குழு அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம். ஆகவே பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்து கொண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைக்காமல், வெளியில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்குமாறு ஆளும் தரப்பின் 159 உறுப்பினர்களிடமும் கேட்டுக்கொள்கிறேன். இனி சட்டத்தின் ஊடாக அனைத்தையும் தீர்த்துக்கொள்ளலாம். என் மீதும், எனது மனைவி மீதும் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்த பிரதான ஊடகம் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக விளக்கம் கோரல் கடிதம் அனுப்பி வைத்துள்ளேன்.

விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் பற்றி கோப் குழுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் வீழ்ச்சியடைவதற்கு அல்லது நெருக்கடிக்குள்ளாக்குவதற்கான காரணத்தை ஆராய வேண்டும். கடந்த காலங்களில் முன்னெடுத்த சகல அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு எதிராகவே மக்கள் விடுதலை முன்னணி செயல்பட்டது. கொழும்பு துறைமுக அபிவிருத்தி கருத்திட்டத்தால் சிகிரியா குன்றையும் பெயர்த்தெடுக்க நேரிடும் என்று யார் குறிப்பிட்டது. மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டத்தால் நாடு பல பில்லியன் டொலர்களை இழந்துள்ளது.- என்றார்.

(எ)

# ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் கல்விக்கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 28

யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் செ. பகீரதன் தலைமையில் கல்விக் கண்காட்சி சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கண்காட்சியை அயலில் உள்ள பாடசாலை மாணவர்களும் பாடசாலைச் சமூகத்தினரும் பார்வையிட்டு பயன்பெற்றனர்.

இவ்வாறான கண்காட்சிகளை பாடசாலைகளில் நடத்துவதன் மூலம் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்கள் வளர்வதோடு மாணவர்களின் புதிய ஆற்றலும் வளர்ச்சியடைகிறது.

இந்தக் கண்காட்சியில் விருந்தினராக வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் ப. அருந்தவம் விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.(எ)



# அக்கரப்பத்தனை மருத்துவமனையில் குழப்பமான சூழ்நிலை

நுவரெலியா, செப். 28

நுவரெலியா, அக்கரப்பத்தனை பிரதேச மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு குழப்பகரமான சூழ் நிலை ஏற்பட்டது.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் ஒருவர் உயிரிழந்ததையடுத்து, அவருக்கு முறையாக சிகிச்சையளிக்கப்படாததாலேயே உயிரிழந்தார் என பிரதேச மக்கள் சிலர் குற்றஞ்சாட்டினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரகல தோட்டம் மேல் பிரிவை சேர்ந்த 25 வயது இளைஞன் ஒருவர் கடந்த 23 ஆம் திகதி குறித்த மருத்துவமனையில் வெளி நோயாளர் பிரிவில் மருந்து எடுத்துக்கொண்டு வீடு சென்றுள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு நேற்று முன்தினம் நோயின் நிலை தீவிரமாகியுள்ளது. இதனையடுத்து குறித்த இளைஞனை அவரது உறவினர்கள் மருத்துவமனைக்கு கொண்டுவந்துள்ளனர். அவரை பரிசோதித்த மருத்துவர், தங்கியிருந்து சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தியிருந்தார்.

இவ்வாறு சிகிச்சை பெற்றுவந்த இளைஞன் இரவு உயிரிழந்தார்.

இதனையடுத்தே பிரதேச மக்கள் சிலர் மருத்துவமனைக்குள் நுழைந்து, முறையாக சிகிச்சையளிக்கப்படாததாலேயே உயிரிழந்தார் என ஆக்ரோஷமாக நடந்துகொண்டனர்.

இதனையடுத்து அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் மருத்துவமனைக்கு விரைந்தனர்.

அங்கிருந்த மக்களை மருத்துவமனை வளாகத்திலிருந்து அகற்றி, மருத்துவமனைக்கு பலத்த பாதுகாப்பளித்தனர்.

(எ)

# பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் சோடா, குளோரின் உற்பத்திக்கு திட்டம்

கொழும்பு, செப். 28

பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் சோடா மற்றும் குளோரின் உற்பத்திகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி பொது, தனியார் கூட்டுத் திட்டமான இந்த நடவடிக்கைக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாடுவதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பரந்தன் இரசாயன தொழிற்சாலை அமைந்துள்ள வளாகத்தில் சோடா மற்றும் குளோரின் உற்பத்தி ஆலையை மீண்டும் ஆரம்பிப்பதன் சாத்தியப்பாடுகள் குறித்த ஆய்வுகள் நிறைவடைந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனமான பரந்தன் இரசாயன தொழிற்சாலையில், ஒதுக்கப்பட்ட 30 ஏக்கர் நிலத்தில் செயற்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்ட திட்டத்திற்கான முதலீட்டாளர்களைத் தேடும் நடவடிக்கைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனூடாக, சுமார் 95 நேரடி வேலை வாய்ப்புகளையும் சுமார் 2,000 மறைமுக வேலை வாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

(அ)

# சம்பா அரிசியை அதிகளவு விலைக்கு விற்பனை செய்த தனியார் நிறுவனம்!

கொழும்பு, செப். 28

இறக்குமதி செய்யப்பட்ட சம்பா அரிசியை, அதிக விலைக்கு விற்பனை செய்த தனியார் நிறுவனம் ஒன்றுக்கு எதிராக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

காலி கஹவத்தை பகுதியிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கே, 5 இலட்சம் ரூபாய் அபராதத்தை காலி நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

நிறுவன உரிமையாளர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, குறித்த அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார சபை தெரவித்துள்ளது.

அதன்படி, குறித்த நிறுவனம் 270 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட வேண்டிய இறக்குமதி செய்யப்பட்ட சம்பா அரிசி கிலோ ஒன்றினை 273 ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

(அ)

# மக்கள் போராட்டம் மீண்டும் வெடிக்கும்

## எதிர்க்கட்சி எச்சரிக்கை

கொழும்பு, செப். 28

இந்த அரசாங்கம் ஏற்படுத்துவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்த வெளிப்படைத்தன்மையை, அரசாங்கத்துக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு மாத்திரமே அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது. அரசாங்கம் தொடர்ந்து இவ்வாறு செயல்பட்டுவந்தால், மீண்டும் மக்கள் போராட்டம் ஒன்று இடம்பெறுவதை தடுக்க முடியாமல் போகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த கால ஆட்சியாளர்களின் ஊழல் மோசடி பிரச்னைகளால் மக்கள் ஆட்சியாளர்கள் தொடர்பில் விரக்தியடைந்தார்கள். இதன் காரணமாக 2022இல் நாட்டுக்குள் மக்கள் போராட்டம் வெடித்தது.

இந்த போராட்டம்தான் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு காரணமாக அமைந்தது. அதனால் அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியிருந்தது. வெளிப்படைத்தன்மை ஏற்படுத்துவதாக தெரிவித்திருந்தது.அதன் பிரகாரமே அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடைத்தது.

ஆனால் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பார்க்கும்போது, அரசாங்கத்துக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு மாத்திரம் செயல்படுத்துவதையே காணக்கூடியதாக இருக்கிறது. ஜனாதிபதியும் எங்கு சென்றாலும் சட்டத்தின் ஆட்சி, வெளிப்படைத்தன்மை தொடர்பில் கதைத்து வருகிறார்.

ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அரசாங்கத்துக்கு தெரிவிக்கப்பட்ட முதலாவது குற்றச்சாட்டு, மன்னார் காற்றாலையை கேள்வி கோரல் மூலம் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்துக்கு வழங்காமல் வேறு நிறுவனத்துக்கு வழங்கியமை தொடர்பாகும். அவர் ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்.

இதுதொடர்பில் இலஞ்சல் ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை அதுதொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை..

அதேபோன்று சுங்கத்தில் இருந்து எந்தவித பரிசோதனையும் இல்லாமல் வெளியேற்றப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் நாட்டுக்குள் பேசுபொருளாக இருந்தது. அந்தக் கொள்கலன்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் தேடிப்பார்க்க ஜனாதிபதியால் விசாரணைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, அறிக்கையும் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

ஆனால் அந்த அறிக்கையை வெளியிடுவதற்கு அரசாங்கத்துக்கு முடியாமல் போனதால், நாங்கள் அதனை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தோம். அந்த அறிக்கையில் பல விடங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அண்மையில் 2 கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. அதில் ஐஸ் போதைப்பொருள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

அந்த இரண்டு கொள்கலன்களையும் பரிசோதனை செய்தே சுங்கத்திலிருந்து வெளியேற்றியதாக சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பரிசோதனை செய்த இரண்டு கொள்கலன்களிலும் ஐஸ் போதைப்பொருள் இருந்தது என்றால், பரிசோதிக்காமல் வெளியேற்றப்பட்ட கொள்கலன்களின் நிலைமை தொடர்பில் யார் பதில் சொல்வது? - என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

(எ)

# நவராத்திரியை முன்னிட்டு தினமும் சிவகுரு ஆதீனத்தில் ஆன்மீகவுரை

யாழ்ப்பாணம், செப். 28

நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் நவராத்திரியை முன்னிட்டு தினமும் மாலை 06.00 - 06.30 மணி வரை ஆன்மீகவுரை ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நிகழ்த்தப்படுகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை : “கல்வியில், தியானத்தில் தோல்வி ஏன் ?” என்ற தலைப்பிலும் நாளை திங்கட்கிழமை : “படிக்க, தியானிக்க வேண்டிய நேரம் எது?” என்ற தலைப்பிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை : “படிக்க, தியானிக்க வேண்டிய சூழல் எது ?” என்ற தலைப்பிலும் வரும்

முதலாம் திகதி புதன்கிழமை “கல்வி- அறிவு - ஞானம் - வெற்றி” என்ற தலைப்பிலும் ஆன்மீகவுரை நடைபெறவுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்...

தமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்களைச் செயற்படுத்தி வருவது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். ஆளும் தேசிய மக்கள் சக்தி கட்சியின் தேர்தல் அறிக்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்திருந்த போதிலும், இதனை அவசரப்பட்டு ஒழிக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதனிடையே, முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை நீக்குவது தொடர்பான சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றியமை தொடர்பிலும் அவர் கருத்து வெளியிட்டார்.

அரசாங்கம் உறுதியளித்திருந்ததைப் போலவே, ஆட்சி நிர்வாகச் சீர்திருத்தங்கள் குறித்த இந்த பகுதியில் அதன் சாதனை பாராட்டுக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## காற்றாலைக்கு...

நகருக்குள் கொண்டுவரப்பட்டன.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வீதியை மறித்து போராட்டங்களை மேற்கொண்ட போது, அங்கிருந்து அருட்தந்தையர்கள், பெண்கள் உள்ளடங்கலாக பொலிஸார் அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் குறித்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

காயப்பட்ட நால்வர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனதுடன், தொடர்ந்தும் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## கணனி...

அதாவது, நாட்டின் சனத்தொகையில் 64.1 வீதமானோர் கணனி பற்றிய அறிவை கொண்டிராதவர்கள் என தெரியவந்துள்ளது.

நாட்டில் கணினி அறிவு விகிதம் மிகக் குறைவாக இருப்பதுடன், இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாகவும் அந்த திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

2023 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டுக்கு இடையில் இந்த விகிதம் 3.1 வீதத்தினால் குறைந்துள்ளதை அண்மைய ஆய்வின் முடிவுகள் காட்டுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தையிட்டி...

பூர்வமாக ஏதும் அறிவிக்கப்படவில்லை என்றும் புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள், கலை கலாசாரங்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார். (அ)

## கடற்றொழிலாளர்...

தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்கள், நீண்டகாலமாகப் பல சிரமங்களுக்கும் சமூக ரீதியான ஓரங்கட்டல்களுக்கும் உள்ளாகி வருவதாக அமைச்சர் கூறினார்.

காணாமற்போன, விபத்துக்குள்ளான அல்லது வெளிநாடுகளில் சிறைப்படுத்தப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி மற்றும் வாழ்க்கைப் பாதைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய நிலையை மாற்றும் நோக்குடன், ஜனாதிபதி நிதியம் ஊடாக நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி, கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

சாதாரண தர மாணவர்களுக்கு மாதம் 3,000 ரூபாயும், உயர்தர மாணவர்களுக்கு மாதம் 5,000 ரூபாயும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதம் 8,000 ரூபாயும் வழங்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். (அ)

## சர்வதேச...

இலங்கையின் சட்ட ரீதியான நடவடிக்கைகளைப் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்களின் குழு பாராட்டியுள்ளது.

எனினும், நீண்டகாலமாக நிலவும் வரலாற்று ரீதியான கவலைகள், சட்டச் சிக்கல்கள் மற்றும் நடைமுறைச் சவால்கள் குறித்து ஆழமான கேள்விகளை எழுப்பியுள்ளது.

காணாமல் போனவர்களின் எண்ணிக்கை சுமார் 12,600 என்று இருந்தாலும், உண்மையில் இந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக இருக்கலாம் என்று சில மதிப்பீடுகள் தெரிவிப்பது குறித்துக் கவலை எழுப்பப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட வழக்குகளுக்கு மையப்படுத்தப்பட்ட தரவுத்தளம் இல்லாதது குறித்தும், மாநாட்டின் வழிகாட்டல்களுக்கு இணங்காத வகைப்பாடுகள் பயன்படுத்தப்படுவது குறித்தும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் ஒரு தொடர்ச்சியான குற்றம் என்ற தன்மையை குற்றவியல் நடைமுறைச் சட்டம் அல்லது புதிய சட்டம் அங்கீகரிக்கவில்லை என்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

20 ஆண்டுகால காலாவதிச் சட்டம் எவ்வாறு நீதியைப் பாதிக்கும், பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டுவது எப்படி என்று பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர் கார்மென் ரோசா வில்லா குயின்டானா கேள்வி எழுப்பினார்.

புதிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சட்டத்தில் "போர்க் குற்றங்கள்" மற்றும் "மனிதக் குலத்திற்கு எதிரான குற்றங்கள்" என்ற கருத்துக்கள் ஏன் சேர்க்கப்படவில்லை? இக்குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படுவது குறித்து அரசின் நிலைப்பாடு என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வழக்குகளில் ஒரு மேலதிகாரியின் உத்தரவை ஒரு பாதுகாப்பு முறையாகக் கொண்டு, குற்றமிழைத்த அதிகாரிக்குப் பொறுப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா? இந்தச் சட்டம் உத்தரவிட்ட அல்லது தெரிந்திருந்த மேலதிகாரிகளின் பொறுப்பைப் பற்றிப் பேசுகிறதா?

பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலிஸ்துறையினரின் காப்பகங்களை அணுகுவதில் ஒத்துழைப்பு இல்லை.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்களை வழங்க அவர்கள் மறுப்பதாகவும் அறிக்கைகள் குறித்து நிபுணர்கள் வினவினர்.

ஒத்துழைக்க மறுக்கும் படையினருக்கு என்ன தண்டனைகள் விதிக்கப்படுகின்ற என்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அரசால் அச்சுறுத்தப்படுவது அல்லது கண்காணிக்கப்படுவது குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டது.

பழிவாங்கலுக்கு அஞ்சாமல் புகார்களைச் சமர்ப்பிப்பதை அரசு எவ்வாறு உறுதிப்படுத்தும்?

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எப்போதும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்றும், அதன் வருகைக்கான உரிமை சட்டத்தில் பொறிக்கப்படவில்லை என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், வழக்கு விசாரணையின்றி அதிகபட்சமாகத் தடுப்புக் காவலில் வைக்க அனுமதிக்கப்படும் காலம் எவ்வளவு? என்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஆட்கடத்தலைத் தனித்த குற்றமாக ஏற்றுக்கொண்டமை வரவேற்கத்தக்கது.

ஆனால், புலம்பெயர்வு சூழலில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் குறித்து அரசு எவ்வாறு விசாரிக்கிறது? எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்குப் பயிற்சி உள்ளதா? என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அத்துடன், மனித அல்லது பெயரிடப்படாத புதைகுழிகளில் காணப்படும் மனித எச்சங்களை மரபணு தரவு வங்கியில் உள்ள தகவல்களுடன் பொருத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் உள்ளன?

2008 காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் மூன்று கடற்படைத் தளபதிகளின் ஈடுபாடு, சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சமூகப் புதைகுழி மற்றும் காணாமல் ஆக்கப்படுதல் குறித்து விசாரிக்கும் பத்திரிகையாளர்களுக்கு அச்சுறுத்தல் போன்ற முக்கிய வழக்குகள் குறித்து என்ன விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்துள்ள இலங்கைத் தூதுக்குழு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களைக் கையாளும் சட்ட அமைப்பு, நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கவனம் செலுத்துகின்றதாக அறிவித்துள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான 2018 சட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

இதற்கு இணையாக இழப்பீட்டுச் சட்டம், காணாமல் போனோர் அலுவலகச் சட்டம் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டம் ஆகியவையும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. - என்று இலங்கை அறிவித்துள்ளது. (அ)

## நீதி...

அரசாங்கத்தின் ஏற்பாட்டில் அந்நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன பற்றி இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்கு தெளிவூட்டும் வகையிலான செயலமர்வொன்று கடந்த 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை சுவிற்சர்லாந்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வின் ஓரங்கமாக இலங்கையின் ஆளும், எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி அங்கு சென்ற 13 உறுப்பினர்களுக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பொறுப்பதிகாரி ரொறி மன்கோவனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது நிலைமாறுகால நீதியின் அடிப்படை நீதியே எனவும், நீதி நிலைநாட்டப்படாமல் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது சாத்தியமில்லை எனவும் ரொறி மன்கோவன் இலங்கைப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு நீதி உள்ளடங்கலாக நிலைமாறுகால நீதியை உறுதிப்படுத்துவதற்கு இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் தாம் அவதானம் செலுத்துவோம் எனக் குறிப்பிட்ட அவர், இருப்பினும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 16 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இன்னமும் எந்தவொரு முன்னேற்றமும் எட்டப்படவில்லை என விசனம் வெளியிட்டார்.

அதேபோன்று நீதியை நிலைநாட்டுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருப்பதாகவும், அதில் முன்னேற்றங்கள் எட்டப்படாவிடின் அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்வதற்கான ஆணையை தமக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வழங்கியிருப்பதாகவும் ரொறி மன்கோவன் தெரிவித்தார்.

அதற்கமைய தாம் ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறை உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், இருப்பினும் அவை இலங்கையின் முன்னேற்றகரமான நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் இடையூறாக அமையாது எனவும் அவர் உறுதியளித்தார். (அ)

## மன்னார்...

ஏமாற்றத்தைத் தரும் வகையிலே உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனநாயகம் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டதாலேயே ஆயுதப் போராட்டம் ஏற்பட்டதாகவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (அ)

## 2017...

ஆம் திகதி ஆரம்பமாகி நிலையில், இலங்கை தொடர்பான விவகாரம் நேற்று முன் தினம் ஆராயப்பட்டது.

இதன்போது, இலங்கை சார்பில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான தூதுக்குழு கலந்து கொண்டது.

இலங்கையானது பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையைத் தனது தேசியச் சட்டத்தில் வெற்றிகரமாக இணைத்ததற்காக நிபுணர்கள் பாராட்டினர்.

உடன்படிக்கையை அங்கீகரித்தமை மற்றும் காணாமல்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டமை ஆகியவற்றை நிபுணர் ஒலிவியர் டி ப்ரூவில் வரவேற்றுள்ளார்.

எனினும், 1980 முதல் 2009 வரை காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களை நினைவுகூர்ந்த நிபுணர்கள், சமீபத்திய ஆண்டுகளில் வெள்ளை வான்களில் கடத்திச் சென்று இரகசிய தடுப்புக்காவலில் வைத்திருக்கும் சம்பவங்கள் மீண்டும் பதிவாகியிருப்பதாகக் கவலை தெரிவித்தனர்.

அத்தகைய தடுப்புக்காவல்கள் தொடர்பாக காவல்துறை எவ்வாறு பூச்சிய சகிப்புத்தன்மை கொள்கையை நடைமுறைப்படுத்துகிறது என்றும் நிபுணர் டி ப்ரூவில் கேள்வி எழுப்பினார்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அரசால் அச்சுறுத்தப்படுவதாகவும், கண்காணிக்கப்படுவதாகவும், சில சமயங்களில் பொலிஸார் முறைப்பாடுகளை ஏற்க மறுப்பதாகவும் நிபுணர் கார்மென் ரோசா வில்லா குயின்டானா குறிப்பிட்டார்.

பழிவாங்கலுக்கு அஞ்சாமல் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதை அரசு எவ்வாறு உறுதி செய்தது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, 2018 ஆம் ஆண்டு சட்டம் வலிந்து காணாமல் ஆக்கப்படுவதை முற்றிலும் தடை செய்வதை உறுதி செய்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் உட்பட தடுப்புக்காவல் இடங்களை முன்னறிவிப்பு இல்லாமல் வழக்கமான வருகைகள் மூலம் கண்காணிக்க அதிகாரம் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடுகளை அடக்குவதில் பொலிஸ்துறைக்குப் பூச்சிய சகிப்புத் தன்மை கொள்கை உள்ளது என்றும், முறைப்பாடுகளைப் பதிவு செய்ய மறுக்கும் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் இலங்கையின் தூதுக்குழு உறுதியளித்தது.

அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, உண்மை மற்றும் தீர்வு கிடைப்பதில் உறுதியாக உள்ளது என்று அமைச்சர் நாணயக்கார தனது அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைக் கடப்பாடு, அண்மைய அரசியல் மாற்றங்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் குறித்த சட்டபூர்வ மற்றும் நிறுவன ரீதியான நடவடிக்கைகள் ஆகியவற்றை வலியுறுத்தியுள்ளது.

உள்நாட்டு நல்லிணக்கப் பொறிமுறைகள் சுதந்திரமாகச் செயல்படுவதை உறுதி செய்வதோடு, அதற்குத் தேவையான கூடுதல் நிதி மற்றும் மனித வளங்களை அரசாங்கம் வழங்குவதாக வும் இலங்கையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சீனா செல்கிறார் பிரதமர்!



கொழும்பு, செப். 28

பிரதமர் ஹரிணி அமரசூரிய உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு ஒக்ரோபரில் சீனா செல்லவுள் ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப் படுத்தும் வகையில் பிரதமர் இவ் விஜயத்தை மேற்கொள் ளவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச் சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டு 76 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலங்கையிலுள்ள சீன தூதரகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் மற்றும் இலங்கை மக்கள் சார்பில் சீனாவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

1949ஆம் ஆண்டு சீன மக்கள் குடியரசை ஏற்றுக் கொண்ட பிரதான நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அன்றிலிருந்து தொடரும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஒக்ரோபரில் பீஜிங்கிற்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்யவுள்ளார். அதே போன்று சீனாவின் 'ஒரு சீனா' கொள்கையையும் எமது வெளிநாட்டுக் கொள்கையின் ஊடாக ஸ்திரமாக ஏற்றுக் கொள்கின்றோம் - என்றார் அமைச்சர். (அ)

# நவ.15 இற்குள் பாதுகாப்பு தரவுகளுடன் புதிய இலக்கத் தகடுகள் வழங்கப்படும்!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க



கொழும்பு, செப். 28

எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதிக்குள் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புத் தரவுகளுடன் கூடிய புதிய இலக்க தகடுகள் வழங்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கான அனைத்து ஒப்பந்த அழைப்புகளும் நிறைவடைந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அதன்படி, முந்தைய வாகன இலக்கத் தகடுகளை விட தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட இந்தப் புதிய எண் தகடுகள் நவம்பரில் வழங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.(அ)

# பொலிஸ் கட்டடத்தில் கொள்ளை!

கொழும்பு, செப். 28

கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் ஆறாவது மாடியில் உள்ள கேட்போர் கூடத்தில் மின் இணைப்பு வயர்கள் துண்டிக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் கேட்போர் கூடத்துக்குள் நுழைந்து, கேட்போர் கூடத்தில் உள்ள மின்னணு சாதனங்களுக்கு மின்சாரம் வழங்கும் மின்சாரக் கம்பிகளில் இருந்து செப்பு கம்பி வயர்களை திருடியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் ஒகஸ்ட் 01 முதல் செப்ரெம்பர் 24 வரை காலப் பகுதியில் நடந்ததாகக் கூறி, அந்தக் கட்டடத்தின் பொறுப்பாளர் கொழும்பு-மத்திய குற்றப் புலனாய்வு அலுவலகத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

திருடப்பட்ட பொருட்களின் மதிப்பு இன்னும் மதிப்பிடப்படவில்லை.

அதே நேரத்தில் கொழும்பு - மத்திய குற்றப் புலனாய்வு அலுவலகம் இந்த விவகாரம் குறித்து விசாரணைகளை நடத்தி வருகிறது. (அ)

# தேர்தல் காலங்களில் அரசால் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவேண்டும்

## நாமல் ராஜபக்ஷ கோரிக்கை



கொழும்பு, செப். 28

தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாவிட்டால் அரசாங்கம் இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என பொதுஜன பெரமுன வின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தற்போதைய அரசியல் களநில வரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதாக அரசாங்கம் வாக்குறுதி வழங்கியது. அதே நேரம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ரத்து செய்வதாகவும், நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை மீண்டும் வழங்குவதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

அத்துடன் தேர்தல் முறைமையை மாற்றுவதாகவும் வாக்குறுதியளிக்கப்பட்டது. நாடு சரியான பாதையில் கொண்டு செல்லப்படும் என்ற நோக்கிலேயே மக்கள் அரசாங்கத்துக்கு வாக்களித்தார்கள். அந்த வாக்குறுதிகள் நிறைவேறா விட்டால், தற்போதைய நிலை தொடராது.

மக்கள், எதிர்க்கட்சிகள் எவ்வ ளவு போராடினாலும், பெரும்பாலும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக செயல்பட முடியவில்லை. எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பலர் ஊழல் செயல்பாடுகளில் ஈடுபட்டவர்களாவர். இலங்கையில் ஜனாதிபதிக்கு எதிராக ஒரு சட்டமும் இல்லை.

ஜனாதிபதி சொன்னால், யாராக இருந்தாலும், என்ன செய்தாலும், அது சட்டமாகிவிடும். இலங்கை அந்த நிலைக்கு சென்றுவிட்டது.

அனுர குமார திஸாநாயக்கவும் ஒருநாள் தனது பொறுமையை மீறி அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும் என்று எண்ணினால், அவர் ஒரு மகிந்தவாகவே மாறலாம் - என்றார். (அ)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்

# சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர் பதவியுயர்வுகளுக்கு பேரவை அங்கீகாரம்!



யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஒருவரைச் சிரேஷ்ட பேராசிரியராகவும், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆறு பேரைப் பேராசிரியர்களாகவும் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரைச் சிரேஷ்ட பேராசிரியராகவும், மருத்துவ பீடத்தின் சத்திர சிகிச்சையியல் துறை மற்றும் உடற்கூற்றியல் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூன்று பேரையும், கலைப்பீடத்தின் புவியியல் துறை, இந்து கற்கைகள் பீடத்தின் சமஸ்கிருதத்துறை மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் விளையாட்டு விஞ்ஞான அலகைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரையும் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கே பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய்த் திறமை அடிப்படையில் சிரேஷ்ட பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த விவசாய உயிரியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் ஜி. திருக்குமரன், பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த சத்திர சிகிச்சையியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி, சிரேஷ்ட விரிவுரையாளரும், சத்திர சிகிச்சை நிபுணருமான சுந்தர மூர்த்தி ஐயர் துரைசாமி சர்மா, உடற்கூற்றியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி துரைரட்ணம் செந்தூரன், புவியியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா, சமஸ்கிருதத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா மற்றும் விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சிவநேசன் சபா ஆனந் ஆகியோரின் விண்ணப்ப மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், விவசாய பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜி. திருக்குமரன் விவசாய உயிரியலில் சிரேஷ்ட பேராசிரியராகவும், மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் பாலசிங்கம் பாலகோபி சிறுநீரகவியலில் பேராசிரியராகவும், சத்திர சிகிச்சை நிபுணர் சுந்தரமூர்த்தி ஐயர் துரைசாமி சர்மா சத்திர சிகிச்சையியலில் பேராசிரியராகவும், உடற்கூற்றியல் துறைத் தலைவர் கலாநிதி துரைரட்ணம் செந்தூரன் உடற்கூற்றியலில் பேராசிரியராகவும்,

புவியியல் துறைத் தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா புவியியலில் பேராசிரியராகவும், சமஸ்கிருதத்துறைத் தலைவர் கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா சமஸ்கிருதத்தில் பேராசிரியராகவும், விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சிவநேசன் சபா ஆனந் உடற்கல்வியியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (அ)

# 2026 இல் அரச செலவு 4,434 பில்லியன் ரூபா!

கொழும்பு, செப். 28

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச மொத்த செலவீனமாக 4 ஆயிரத்து 434 பில்லியன் ரூபா மதிப்பிடப் பட்டுள்ளது.

ஒதுக்கீட்டு சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம், பதில் நிதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னான்டோவால் முன்வைக் கப்பட்டது.

2026 பாதீட்டில் நிதி அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள் ளது. 634 பில்லியன் ரூபா இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு 455 பில்லியன் ரூபாவும், சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்கு 554 பில்லியன் ரூபாவும், கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுக்கு 301 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படவுள்ளது.

அத்துடன், உள்ளூராட்சிச்சபை மற்றும் மாகாணசபைகள் அமைச்சுக்கு 618 பில்லியன் ரூபாவும், பொதுநிர்வாக அமைச்சுக்கு 596 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி நிதி அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றது. இது 2 ஆம் வாசிப்பாக கருதப்படும். 2 ஆம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை நடைபெறும். 14 ஆம் திகதி மாலை 2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நவம்பர் 15 ஆம் திகதி ஆரம்பமாகும். பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு டிசெம்பர் 5 ஆம் திகதி நடைபெறும். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org